
நாலடியார்

விளக்கக் கதைகள்



கழக வெளியீடு

கழக வெளியீடு - ௯௩௦

நாலடியார்
விளக்கக் கதைகள்

ஆசிரியர் :
திரு. க. இனியன்

:: திருநெல்வேலித் தென்னிந்திய ::
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
திருநெல்வேலி :: சென்னை 1.

First Edition : March, 1950.

Published by :

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD., 1/140, BROADWAY, : : MADRAS 1.

Head Office :

24, EAST CAR STREET, THIRUNELVELI.

அப்பர் அச்சகம், 2/140, பிராட்வே, சென்னை 1.

பதிப்புரை

'நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி' என்பர் அறிஞர். எனவே, நாலடியின் நயத்தைச் சிறுவருக்கும் நல்க எண்ணினோம்.

கதைவழிக் கருத்தை விளக்கிப் பின் பாடலையும் அதன் விளக்கத்தையும் தரின், மாணவர்க்குப் பெரிதும் பயன்தரும் என்பது கல்வித்துறை அறிஞர் பலரும் கருதுவதாகும்.

அதற்கியைய திரு. க. இனியன் அவர்களின் இக் கதைத் தொகுதியினை வெளியிடுகின்றோம்.

தமிழகம் இதனையும், இத்தகைய பிற நீதிநூல் விளக்கக் கதைகளையும் விரும்பி வரவேற்கும் என நம்புகின்றோம்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

பொருளடக்கம்

நாலடியார்

விளக்கக் கதைகள்

க. கப்பங்கூழ் இரந்த கம்பர்

'கல்வியிற் பெரியவன் கம்பன்' என்று புகழ் படைத்த கம்பர் ஓர் எளியகுடியில் தோன்றினர். திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்பர் உதவியினல் கல்வியை நன்கு கற்றுச் சிறப்படைந்தார். கம்பரின் புகழ் எங்கும் பரவியது. இறுதியிற் கம்பர் சோழ மன்னனுடைய அவைக்களப் புலவராக அமர்ந்தார். அரசன் கம்பருக்கு அளவற்ற செல்வங்களை வழங்கினன். அதனற் கம்பர் ஒரு சிற்றரசன்போலச் சிறந்து விளங்கினர். இனிய உணவுகளைத் தம் இல்லாள் உண்பிக்க உண்டு மகிழ்ந்தார். கம்பர் அரச செல்வத்தில் அமர்ந்து திளைக்கும்போது அவருக்குக் கெட்டகாலம் வந்தது. சில காரணங்களை முன்னிட்டு அரசன் கம்பருடைய செல்வம் அனைத்தையுங் கைப்பற்றிக்கொண்டு தன்னுடைய நாட்டைவிட்டு விரட்டிவிட்டான்.

அரசனல் வெறுத்து அகற்றப்பெற்ற கம்பர் பலவிடங்களினுஞ் சுற்றித்திரிந்தார். உணவின்பொருட்டு மிகுந்த அல்லற்பட்டார். அகப்பட்ட இடங்களில் கூலி வேலையுஞ் செய்தார். ஒருநாள் ஓர் ஊரில் கம்பருக்குப் பசி மிகுதியாக இருந்தது. ஒரு செட்டியாருடைய கடைக்குச் சென்று தின்பதற்கு ஏதேனும் வேண்டு

மென்று கேட்டார். அந்தச் செட்டியார், 'யாதும் இல்லை' என்று கூறிவிட்டார். பிறகு கம்பர் ஒரு வாணியன் செக்காடிக்கொண்டிருந்த இடத்திற்குச் சென்று சிறிது பிண்ணாக்கு வேண்டுமென்று கேட்டார். அவன், 'இன்னும் எண்ணெய் எடுபடவில்லை; கொடுக்கமுடியாது' என்று கூறிவிட்டான். பிறகு ஒரு பார்ப்பான் வீட்டிற்குச் சென்று, 'ஏதேனுஞ் சிறிது உணவுவேண்டு' மென்று கேட்டார். அப்பார்ப்பான், 'பிறருக்கு நாங்கள் உணவிட்டால் எஞ்சிய உணவு எச்சிலாகிவிடு'மென்று இயம்பிவிட்டான்.

பிறகு கம்பர் ஊரைத்தாண்டி வயல் வழியாக அடுத்த ஊருக்குச் சென்றுகொண்டிருந்தார். வழியில் ஒரு காராளன் தன் ஏரை நிறுத்திவிட்டு நண்பகல் உணவு உண்டுகொண்டிருந்தான். கம்பமாவினால் காய்ச்சப்பட்ட கூழ்தான் அவனுடைய உணவு. கம்பர் அவனிடம் சென்று இருகைகளையும் நீட்டினார். அக்காராளன் அருள் மிகுந்த உள்ளத்தினன். அவன் உடனே கம்பரை அண்மையிலிருத்தி அவருக்கு உணவு ஊட்டி அவரை மகிழ்வித்தான்.

'செட்டிமக்கள் வாசல்வழிச் செல்லோமே செக்காரப்
பொட்டிமக்கள் வாசல்வழிப் போகோமே—முட்டிபுகும்
பார்ப்பார் அகத்தையெட்டிப் பாரோமே எந்நாளும்
காப்பாரே வேளாளர் காண்'

என்று கம்பர் அந்தக்காராளனைக் கனிவுடன் புகழ்ந்து பாடிச்சென்றார். மிகுந்த செல்வத்துடன் இனிதுவாழ்ந்திருந்தவர்கள் தமது செல்வ நலங்களையெல்லாம் இழந்து பிறிதோரிடத்திற் சென்று கூழையும் இரப்பர் என்பதை உலகம், கல்வியிற் பெரிய கம்பரிடத்திலே உணர்ந்து கொண்டது.

அறுசுவை யுண்டி அமர்ந்தில்லாள் ஊட்ட
மறுசிகை நீக்கி உண்டாரும்—வறிஞராய்ச்
சென்றிரப்பர் ஓரிடத்துக் கூழெனிற் செல்வமொன்று
உண்டாக வைக்கற்பாற் றன்று.

நாலடியார், அறம், செல்வநிலையாமை, செய். 1

இதன் பொருள்: அறுவகை இனிமை பொருந்திய உணவினை விரும்பி, மனைவியானவள் உண்பிக்க, மறு கவளத்தினை விலக்கி உண்டசெல்வர்களும் வறுமையுடையவர்களாய் வேறோரிடத்தில் போய்க் கூழினை ஐயமாகப்பெறுவார்களென்றால், செல்வம் என்று சொல்லப்பெறுகிற ஒரு பொருள் நிலையுடையதாக வைக்கும் பகுதியை உடையது அன்று.

உ. சுற்றத்தாரை வெறுத்த துரியோதனன்

துரியோதனன் திருதராட்டிரனுடைய தலைமகன். இவனும் இவனுடன் பிறந்தார்களாகிய மற்றையோரும் கௌரவர் என்று கூறப்பெறுவர். இக் கௌரவர்கள் நூற்றுவர்கள் ஆவர். தருமர் அருச்சுனன் முதலிய ஐவர் பாண்டவர்களெனப்பெறுவர். கௌரவர்களும் பாண்டவர்களும் உடன்பிறந்தார்களாவர். நற்பண்பு பாண்டவர்களிடந்தான் அமைந்திருந்ததே யன்றிக் கௌரவர்களிடஞ் சிறிதும் இல்லை. துரியோதனன் பாண்டவர்களுக்குக் கேடு புரிவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தான். குருகுலம் என்னும் ஒரு குலத்தில் தோன்றிய இவர்கள் இருகுலத்தினரைப்போல ஆனார்கள். தீயனான துரியோதனன் தீயவைகளைப் பாண்டவர்களுக்குச் செய்ததுடன் அமையவில்லை. குருகுலச் செல்வத்திலிருந்து பாண்டவர்களுக்குப் பங்கு கொடுக்கவும் அவன் விரும்பவில்லை. செல்வம் நிலையற்றதென்பதை யுணராத துரியோதனன் பாண்டவர் செல்

வத்தை வஞ்சனையாகக் கைப்பற்றிக்கொண்டான். வீடுமர் துரோணர் முதலிய பெரியோர்கள் துரியோதனனுக்கு அறிவுரைகள் பல கூறிப்பார்த்தார்கள். துரியோதனன் அவைகளைச் சிறிதுங் கேட்கவில்லை. பாண்டவர்களுடைய அரசியலையுங் கைப்பற்றிக்கொண்டு வேண்டிய இன்பநலங்களை வேண்டியவாறு நுகரவேண்டுமென்பதே அவனுடைய நோக்கமாகவிருந்தது. பங்காளிகளுக்குப் பங்கு கொடுக்காமல் எல்லாவற்றையுங் கைப்பற்றித் தின்னுதற்கு எண்ணிய மன்னனுக்குச் சிலர் பக்கத்துணையுமிருந்தனர். செல்வப்பெருக்குத் தன்னிடமே நிலைபெற்றுத் திகழுமென்று துரியோதனன் செருக்கியிருந்தான்.

அழியுந்தன்மையுடைய செல்வத்தை அழியாப் பொருளாக எண்ணிய துரியோதனனுடைய செய்கை இறுதியிற் பெரும் போரையுண்டாக்கியது. இருபக்கத்திற்கும் பலர் பக்கத்துணையாக அமைந்தனர். பதினெட்டு நாட்கள் பெரும் போர் நடைபெற்றது. இறுதியில் பாண்டவர் வெற்றியடைந்தனர். துரியோதனனும் அவன் உடன்பிறந்தார்களும் அவர்கட்குத் தீயறிவு புகட்டிய சிற்றுணர்வோரும் முற்றற அழிந்தனர். துரியோதனன் கைப்பற்றியிருந்த செல்வம் பாண்டவர்கட்கு உரிமையாகியது. பாண்டவர்களுஞ் சின்னாள் அரசு புரிந்து துறக்கம் புக்கனர். பின்பு அரசாட்சி பாண்டவர்களின் வழித்தோன்றியோர் பாலதாகியது.

இவ்வாறு துரியோதனன், செல்வம் நிலையற்றதென்பதையும், பலரிடத்திலே மாறிமாறிச் செல்லுமென்பதையும், பலரோடுண்ணாத பேரவாக்காரர்கள் மிகுவிரைவில் அழிந்தொழிவார்கள் என்பதையும் உலகுக் குணர்த்தினன்.

துகள்தீர் பெருஞ்செல்வம் தோன்றியக்கால் தொட்டுப்
பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
அகடுற யார்மாட்டு நில்லாது செல்வம்
சகடக்கால் போல வரும்.

செல்வநிலையாமை, செய். 2

(இ - ள்.) நடுவுநிலைமை பொருந்த, எவரிடத்தும் செல்வமானது நிலை பெற்று நிற்கமாட்டாது, வண்டியின் உருளையைப் போல அது மாறிமாறிவரும்; ஆகையால், குற்றம் அற்ற பெரும் பொருளானது உண்டான காலம் முதல், எருதின் உழவால் உண்டான உணவை பலரோடும் உண்ணக்கடவன்.

௩. தொல்லையடைந்த சுக்கிரீவன்

சுக்கிரீவன் என்பவன் வாலியினுடைய தம்பி. கிட்கிந்தையில் அரசனாக அமர்ந்து அரசுபுரிந்துகொண்டிருந்தான். நல்வினைப் பயனால் எல்லா இன்பங்களையும் இனிது நுகர்ந்து கொண்டிருந்தான். அவன் தீவினைப் பயனை நுகரவேண்டிய காலம் வந்தது. அண்ணனுக்குந் தம்பிக்கும் போர் மூண்டு பகையுண்டாகியது. வாலி சுக்கிரீவனுடைய பொருள்களைக் கவர்ந்துகொண்டான். மனைவியையும் தனக்கு உரிமைப்படுத்திக்கொண்டு நன்கு புடைத்துத் துரத்திவிட்டான். வாலி மிகுந்த ஆற்றலமையப்பெற்றவனாகையால் சுக்கிரீவனால் அவனை ஒன்றுஞ் செய்ய முடியவில்லை. தன் துணைவர்கள் சிலருடன் காடுகளினும் மலைகளினும் நெடுங்காலம் மறைந்து திரிந்தான். அரண்மனையில் அரிய இன்பங்கள் பலவற்றை உரிமையுடன் நுகர்ந்து களித்த அவன் மனைவியையும் முன்னோனிடம் பறிகொடுத்துக் கலங்கித் திரிய நேர்ந்தது, பழவினைப் பயனே என்று தெளிந்திருந்ததுடன் உலகத்

திற் காணப்பெறுஞ் செல்வங்கள் நிலையற்றன என்பதை யும் உணர்ந்திருந்தான்.

சுக்கிரீவன் அன்று அடைந்திருந்த அல்லல்கள் இராமபிரான் காட்டிற்குச் சென்றபொழுது முடிவிற்கு வந்தன. மற்றும் உலகத்தில் எத்தனையோ மன்னர்கள் தங்கள் நாட்டையும் மனைவிமக்களையும் பகைவர்க ளிடம் பறிகொடுத்து விட்டு ஓட்டையேந்தி ஐய மேற்றுத் திரிந்தனர்.

யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரும்—ஏனை
வினையுலப்ப வேறுகி வீழ்வர்தாம் கொண்ட
மனையாளை மாற்றார் கொள.

செல்வநிலையாமை, செய். 3.

(இ - ள்.) யானையினது பிடரி விளக்கமடையுமாறு, வெண் குடையின் நிழலின்கீழே படைத்தலைவர்களாகப் பிறவிடங்கட்குச் சென்று கொண்டிருந்த பெருமையுடையவர்களும், தீவினையானது கெடுக்க, தாம் திருமணஞ் செய்துகொண்ட இல்லாளை பகைவர் கைப்பற்றிக்கொள்ள, தமது நிலைமை வேறுபட்டு வீழ்ச்சியையடை வார்கள்.

௩. பொருளிழந்த தனபதி

ஓர் ஊரிலே தனபதி என்ற பெயரினையுடைய ஒரு செல்வன் இருந்தான். அவனுக்கு அளவற்ற செல்வம் இருந்தது. மேலும் அவன் தன்னுடைய செல்வத்தைத் தகுந்த ஈட்டின் பேரிற் கடன் கொடுத்துப் பெருக்கிவந் தான். தனபதி தன்னுடைய செல்வச் சிறப்புக்கு ஏற்ப வாழ்க்கையை மாண்புபெற நடத்தவில்லை. பொருளைப் பெருக்குதலிலேயே தனபதி கண்ணுங் கருத்துமாக

இருந்தமையால் செலவு செய்வதற்கு அவனுக்கு மனஞ் சிறிதும் இடந்தருவதில்லை. தானும் முழுச்சாப்பாடு சாப்பிடமாட்டான். தன்னைச் சார்ந்தவர்களையுஞ் சாப்பிடவிடமாட்டான். தனபதி முதலில் திருமணஞ் செய்துகொள்ளுதற்கு விரும்பாமலிருந்தான். ஏனெனின், திருமணஞ் செய்துகொண்டால் திருமணச் செலவிற்குப் பணஞ் செலவாகும். பிறகு மனைவி மக்கள் தோன்றிச் செல்வத்தினைத் தின்றழிப்பார்கள். அதனாற் பொருட் கேடு உண்டாகும் என்னும் எண்ணமே யாகும்.

தனபதியின் குணத்தைக்கண்ட எவரும் தனபதிக் குப் பெண்கொடுக்க முன் வரவில்லை. தனபதியைப் போன்ற பிசினிக்குணம் படைத்த ஒரு செல்வன் தனபதி தனக்குத் தக்க துணையாவான் என்னும் எண்ணத்துடன் தன் ஒரே மகளைத் தனபதிக்கு மணம் புரிந்து தந்தான். மணமான பிறகும் தனபதி பொருளைத் தக்காங்கு செலவழிக்காமல் அல்லல் வாழ்க்கையையே மேற் கொண்டு வருந்தினான். 'வகுத்தான் வகுத்த வகையல் லால் கோடி, தொகுத்தார்க்குந் துய்த்தல் அரிது' என்பது தெய்வப்புலவர் திருவாக்கன்றோ?

தனபதிக்கு மக்கள் சிலர் தோன்றினர். அந்தோ! இனி இவர்களும் செல்வத்தினைத் தின்றழிப்பார்களே என்று வருந்திக்கொண்டு வழக்கம்போல் காலந்தள்ளிக் கொண்டு வந்தான். சிறிது கஞ்சியும் வறுத்த மிளகாய் ஒன்றுந்தான் தனபதியின் பொதுவான உணவு.

தனபதி தன்னுடைய பொருளை எவரையும் நம்பி வெளியே எவரிடமுங் கொடுத்து வைக்கவில்லை. எல்லா வற்றையும் ஒரு நீண்ட மரப்பெட்டியில் வைத்துப் பூட்டித்தான் அதன்மீது இராப்பகல் படுத்திருப்பான்.

தனபதி தன்னுடைய வீட்டில் வேலையாட்களையும் வைத்துக்கொள்வதில்லை.

ஒருநாள் நள்ளிரவிற் பன்னிரண்டு கள்ளர்கள் தனபதியின் வீட்டிற்குள் நுழைந்தார்கள். தனபதியைப் பிடித்து ஒரு தூணிற் கட்டினார்கள். பெட்டியிலிருந்த பொருள்களையெல்லாம் மூட்டை கட்டினார்கள். தன் செல்வங் கொள்ளை போதலைக் கண்ட தனபதி கூச்சலிட்டான். தனபதி, கூச்சலிட்டதும் ஒரு கள்ளன் தன் கைத்தடியால் தனபதியின் தலை உடையுமாறு ஓங்கியடித்தான். கள்ளர்கள் அனைவருங் கட்டிய மூட்டையுடன் நடையைக் கட்டினார்கள். செல்வத்தைச் செலவு செய்யாது காவல் காப்பவர்கள் இறுதியில் இழந்து வருந்துவார்கள் என்பதற்குத் தனபதியே தகுதி வாய்ந்த எடுத்துக்காட்டாக அமைந்தான்.

உண்ணான் ஒளிநிறான் ஓங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தான்என் றெண்ணப் படும்.

செல்வநிலையாமை, செய். 4.

(இ - ள்.) வயிறார உண்ணாதவனாகவும், அணிகலன்களை அணியாதவனாகவும், மிகுந்த சீர்த்தியைத் தேடாதவனாகவும், பெறுதற்கரிய உறவினர்களின் துன்பத்தைப் போக்காதவனாகவும், இரவலர்களுக்கு அளியாதவனாகவும் ஒருவன் வீணாகப் பொருளைக் காவல் காத்துக்கொண்டு இருப்பானாகில், 'அந்தோ! அவன் பொருள்களை இழந்துவிட்டான்' என்று பிறரால் நினைக்கப்பெறுவான்.

ரு. பொருள் தேடிய பொய்க்கோலத் துறவி

மகதநாட்டிலே தேவசன்மா என்னும் பெயருடைய ஒரு பார்ப்பான் இருந்தான். அவன் வறுமையால் வாடித் துன்புற்ருன். வருத்தமில்லாமற் பொருள் தேடுதற்கு வழி யாது என்று எண்ணமிட்டான். பொய்க் கோலம் பூண்டு நடித்தலே தக்கது என்று முடிவு செய்தான். செந்நிற ஆடையைக் கட்டினுன். துறவுக் கோலத்தை உறவுக் கோலமாகக் கொண்டான். அருள் பெற்றவன்போல் நடித்தான். பொருள் பெற்றவர் பாற் சென்ருன். உண்மையுடைய துறவியென்று மக்கள் நம்பினர். உணவு முதலியன அளித்து வழிபாடு செய்தனர். பலர் பொருள் உதவியும் புரிந்தனர். பொய்க்கோலத் துறவி உள்ளே தொளையுடைய மூங்கில் தடியொன்றைத் தோது செய்தான் பலரிடமிருந்துங் கிடைத்த பொருளை அத்தடிக்குட் செறித்தான். அத் தடியைத் தன்னுடைய உயிரைப்போல் பாது காத்தான். தன்னுயிரைக் கொடுத்தாலுங் கொடுப் பானேயன்றி அத்தடியை எவரிடமுங் கொடான். அவ் வரும்பொருள் தடியே அவனுக்குப் பரம்பொருள் பிடியாக அமைந்தது.

நாட்கள் பல சென்றன. தடியின் உண்மை ஒரு தடியனுக்குத் தெரிந்தது அத்தடியன் பெயர் தீவகன். எப்படியேனும் அத்தடியை அவன் கைப்பற்றிவிட வேண்டுமென்று முடிவு செய்தான். அவனும் பொய்க் கோலம் பூண்டான். தேவசன்மாவை அடைந்தான். ஆசிரியனுக்கு ஏற்ற மாணவனுக அமைந்தான். தொண்டு செய்து திரிந்தான். தண்டு கொண்டுபோகத் தக்க சமயம் பார்த்திருந்தான்.

ஒருநாள் ஆசிரியனும் மாணவனும் ஓர் இல்லிற் சென்று விலாப்புடைக்க விருந்துண்டனர். இருப்பிடத்

திற்கு மீண்டு வந்துகொண்டிருந்தனர். தீவகன் ஒரு துரும்பை யெடுத்துத் தன் தலைமீது வைத்துக்கொண்டான். அதனை ஆசிரியருக்குக் காட்டினுன். 'உண்ட வீட்டிலிருந்து ஒரு துரும்பு என் தலையில் ஒட்டிக் கொண்டு வந்துவிட்டது. நான் அன்னமிட்ட வீட்டில் கன்னமிட்ட தீவினையாளனுனேன்' என்று கூறி வருந்தி நடித்தான். அத்துரும்பை உரியவர் வீட்டிற் சேர்த்துவிட்டு வருவதாக ஓடினுன். சிறிது தொலை ஓடிச்சென்று ஓரிடத்தில் மறைந்திருந்து பிறகு திரும்பி வந்தான். யாரையும் நம்பாத பொய்க்கோலத் துறவி தீவகனை முற்றும் நம்பினுன். தீவகன் பிறர்பொருளை விரும்பாத தூயவன் என்று எண்ணினுன். தன் தண்டை அடிக்கடி தீவகனிடந் தந்து வாங்கினுன்.

ஒருநாள் துறவி மாலைக்கடன் கழிக்கச் சென்ருன். ஓரிடத்தில் இரண்டு ஆட்டுக் கடாக்கள் போரிட்டன. மண்டையுடைந்து குருதி வழிந்தது. ஓரி ஒன்று அக் குருதியை உண்டு மகிழ்ந்தது. அக்காட்சியைத் துறவி சிறிதுபோது கண்டு நின்ருன். அரும்பொருள் தண்டு தீவகனிடம் இருந்தது. துறவி வருதற்குத் தாழ்த்ததைக் கண்டதும், பிறர்மனைத் துரும்புகொள்ளாத தீவகன் ஓடிவிட்டான். திரும்பி வந்த தேவசன்மா வருந்திப் புலம்பினுன். பயன்படுத்தாத பொருள், இழத்தற்கே பயன்படுமென்பதைப் பலரும் உணர்ந்தனர்.

உடாஅதும் உண்ணுதும் தம்முடம்பு செற்றும்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார்—கொடாஅது
வைத்தீட்டி னுர்இழப்பர் வான்தோய் மலைநாட
உய்த்தீட்டுந் தேனீக் கரி.

செல்வநிலையாமை, செய். 10.

(இ - ள்.) நல்ல உடைகளை உடுத்தாமலும், நல்ல உணவுகளை உண்ணாமலும், தமது உடலை வருத்தியும், என்றும் அழியாத அறங்களையும் இயற்றாதவர்களாய், பிறருக்கு யாதுங் கொடாதவர்களாய் வைத்துத் தொகுத்தவர்கள், அப்பொருளை வீணிலே இழந்து விடுவார்கள். விண்ணையளாவும் மலைகளோடு பொருந்திய நாட்டையுடைய பாண்டியனே! அவர்கள் வீணே இழந்து வருந்துவார்கள் என்பதற்கு மலர்கள்தோறுஞ் சென்று ஆராய்ந்து தேனைத் தொகுக்கும் தேனீயே தக்க சான்றாகும்.

௩. சங்கராச்சாரியார்

சங்கராச்சாரியார் என்பவர் மலையாள நாட்டிலே உள்ள காலடி என்னும் ஊரிற்பிறந்தார். இவருடைய தந்தையார், சங்கராச்சாரியார் காளைப்பருவத்தைக் காணுததற்கு முன்னரே விண்ணுலகெய்தினர். சங்கராச்சாரியார் உலக நிலையாமை யாக்கை நிலையாமை முதலியவற்றை உள்ளவாறுணர்ந்தார். இவர் இறைவன் கூறு என்ப. இளமையில்தானே இவர் துறவறத்தை மேற்கொள்ள விரும்பினர். தம்முடைய தாயின் உடன்பாட்டைக் கேட்டார். தாயார் உடன்படவில்லை. தாயை உடன்படச் செய்தற்குத் தக்க சமயத்தை எதிர்பார்த்திருந்தார். ஒருநாள் தாயாருடன் நீர்நிலை ஒன்றிற்குச் சென்றார். தம்முடைய வியத்தகு ஆற்றலால் செயற்கருஞ் செயல் ஒன்றைச் செய்தார். அஃதாவது தம்முடைய காலை முதலையொன்று பற்றுமாறு செய்துகொண்டு கூச்சலிட்டார் தாயார் தம் மகனை முதலை பற்றி ஈர்த்தலைக் கண்டார். மகன் தாயை நோக்கி, 'அம்மா! நான் துறவடைதற்கு நீங்கள் இணங்கினுல் முதலை என்னைக் கொல்லாமல் விட்டுவிடும்; இணங்காவிடினே கொன்றுவிடும்,' என்றார். இப்புதுமையினைக் கண்ட தாயார், 'அப்பா மகனே! நீ துறவியாகியாவது

உயிரோடிருந்தால் போதும்,' என்றூர். முதலையும் சங்கரருடைய காலை விட்டுவிட்டது.

மிக்க இளைஞராய் இலங்கிநின்ற சங்கராச்சாரியார் உடனே துறவு நிலையை மேற்கொண்டார். மாணவர் பலர் சேர்ந்தனர். அவர்கட்கு மறைநெறியை மறுவற உணர்த்தியருளினூர். உலகெங்குஞ் சென்று மக்கட்கு நலம் பல செய்தார். இறுதியில் பிறவாப் பெரும் பேருகிய வீட்டின்பத்தை யடைந்தார்.

துறவுநிலையை மேற்கொள்ளாது உலக நிலையில் தாமே மகிழ்ந்து களித்திருப்பின், பிறகு நரைதிரை வருமென்பதனை உலகத்தார்க்கு உணர்த்தும் செயல் இப் பெரியாரது செயலில் அமைந்துநின்றது.

நரைவரும் என்றெண்ணி நல்லறி வாளர்
குழவி யிடத்தே துறந்தார்—புரைதீரா
மன்னு இளமை மகிழ்ந்தாரே கோலூன்றி
இன்னுங் கெழுந்திருப் பார்.

இளமை நிலையாமை, செய். 1.

(இ - ள்.) நரை திரை மூப்பு முதலியன வருதல் கூடும் என்று நினைத்து, நல்ல அறிவினையுடையவர்கள் இல்லற வாழ்க்கையைப் பிள்ளைப் பருவத்தில்தானே விட்டு நீங்கினூர்கள். குற்றம் நீங்காத, நிலைபேறில்லாத இளமைப் பருவத்தை விரும்பி மகிழ்ந்தவர்கள், தடியை ஊன்றிக்கொண்டு, துன்பத்துடன் எழுந்திருப்பார்கள்.

எ. மணமகன் பிணமகன் மணப்பறை பிணப்பறை

குலோத்துங்க பாண்டியன் என்பவன் மதுரையில் அரசுபுரிந்து கொண்டிருந்தான். அப்பொழுது அந் நகரில் தனதன் என்னும் பெயருடைய ஒரு வணிகன் இருந்தான். அவன் பெருந்திருவுடையவன். அவனுக் குத் திருமணம் நிகழ்ந்தது. செல்வச் சிறப்பிற்கேற்ப மணம் மிகச் சிறப்பாக அமைந்தது. தனதனுடைய உற்ருரும் பெற்ருரும் உறவினரும் ஒருங்குகூடியிருந் தார்கள். பலவகை ஒலிக்கருவிகள் கடல் ஒலிபோல் முழங்கின. மணமகளுக்குத் தாலியுங் கட்டப்பெற்றது.

தாலிகட்டுஞ்சமயத்தில் ஒலிக்கருவிகள் அளவு கடந்து ஒலித்தன. மணப்பந்தரில் ஒரு கற்ரு கட்டப் பெற்றிருந்தது. அது மணவொலியின் மிகுதியினுல் மருட்சியடைந்தது. கட்டியிருந்த கட்டை அறுத்துக் கொண்டு புறப்பட்டது. பலவாறு அழகுபடுத்தப் பெற்று மணவறையில் அமர்ந்திருந்த மணமகனைநோக்கி ஓடியது. தனது கூரிய கோட்டால் அவனை முட்டியது. அதனுல் மணமகனுடைய குடல் பிதுங்கி வெளியே வந்துவிட்டது. அவன் அப்பொழுதே கீழே விழுந்து உயிர் நீத்தான்.

மணமகன் பிணமகன் ஆன அளவில் மணவிழா பிணவிழாவாக மாறிவிட்டது. மணப்பறைகள் பிணப் பறைகளாக மாற்றி முழக்கப்பெற்றன. மங்கையர் வாழ்த்தொலி ஒப்பாரியாக முடிந்தது.

மணமகன் இவ்வாறு மணக்கோலத்துடன் மாண்டு முடிந்ததை அரசன் முதலிய அனைவரும் கண்டு வருந்திக் கலங்கினர். 'இவன் வாழ்வு இவ்வாறு முடிந்ததே! உலக

வாழ்க்கையின் போக்கு இவ்வளவுதானு?' என்று எண்ணி ஏங்கினர்.

அன்று அங்கு நிகழ்ந்த அக்காட்சியைக் கண்ட நல்லறிவாளர் சிலர் உலகவாழ்க்கை பொய்யானது. நாம் துறவு நிலையை மேற்கொண்டு உய்தல் வேண்டும் என்று முடிவு செய்து துறவியாகவும் போயினர். யாக்கை நிலையாமையின் உண்மையை அன்று பலரும் நன்கு விளக்கமாகத் தெரிந்துகொண்டனர்.

மன்றங் கறங்க மணப்பறை யாயின
அன்றவர்க் காங்கே பிணப்பறையாய்ப்—பின்றை
ஒலித்தலும் உண்டாமென் றுய்ந்துபோ மாறே
வலிக்குமாம் மாண்டார் மனம்.

யாக்கை நிலையாமை, செய். 3

(இ - ள்.) திருமணவரங்கமானது ஒலி மிகுந்து விளங்க, மணப்பறைகளாக அமைந்து நின்றவை, அந்நாளில் தானே அம் மணமகனுக்கு, அவ்விடத்தே சாப்பறையாக முடிந்து, பிறகு, முழஙகு தலும் கூடும என்று எண்ணி, பிழைத்துப் போகின்ற வழியை, பெருமையிற் சிறந்தவர்களுடைய உள்ளம், துணிந்து நிற்கும்.

அ. அறத்தின்பயன்

பாண்டவர் ஐவரும் காட்டிற் காலங்கழித்துக் கொண்டிருந்தனர். அப்பொழுது துருவாசர் துரியோதனன் அரண்மனைக்குச் சென்ருர். துரியோதனன் விருந்து செய்து முனிவரைப் போற்றினுன். துருவாசர் துரியோதனனுடைய விருந்திலும் போற்றுதலிலுங் களிப் படைந்தார். 'உனக்கு வேண்டிய மேன்மையைக் கேள்; அவ்வாறே உண்டாதற்கு அருள்புரிவோம்' என்று அருளினுர். தன் இல்லில் விருந்துண்டதைப் போலப்

பாண்டவர்களிடஞ் சென்று விருந்துண்டல் வேண்டுமென்று துரியோதனன் சூழ்ச்சியாக வேண்டினான். பாண்டவர் காட்டின்கண் வறிய நிலையில் உள்ளார்களாதலின் துருவாசரின் சினத்திற்கு இலக்காகி அழிந்தொழிவார்கள் என்பது அவனுடைய எண்ணம்.

துருவாசர் பாண்டவர் இருக்குமிடத்திற்குச் சென்றார். பாண்டவர்கள் துருவாசரை வணங்கிப் போற்றினார்கள். துருவாசர் பாண்டவர்களைப் பார்த்து, 'யான் கடும்பசியுடன் இருக்கின்றேன்; எனக்கு அறுசுவையுடன் கூடிய அடிசிலை விரைவிற் படைக்க வேண்டும்' என்று கட்டளையிட்டார். தாம் நீராடச் சென்றார். எல்லாப் பொறுப்பையுங் கண்ணன்மீது போட்டிருந்த பாண்டவர்கள் அம்மணிவண்ணனை எண்ணினார்கள். அவ்வண்ணனும் விரைந்து வந்தார். நிகழ்ந்ததை யுணர்ந்தார். பாண்டவர்களுடைய ஏனத்தில் இருந்த ஒரே ஒரு சோற்றைப் பெற்று உண்டார்.

நீராடச் சென்றிருந்த துருவாசரும் அவர் துணைவர்களும் விரைந்து வந்துகொண்டிருந்தார்கள். கண்ணன் ஒரு சோறு உண்ட அளவில்தானே துருவாசருடைய வயிற்றுத் தீ முழுதும் மாய்ந்தொழிந்தது. அப்பொழுதுதான் வயிறு நிறைய உண்டார் போலத் துருவாசர் மனநிறைவு கொண்டார். ஒரு பருக்கையை உள்ளே தள்ளுதற்குக்கூட முடியாதபடியான பண்பு அவருக்கு உண்டாகி யிருந்தது. அவர் விரைந்து பாண்டவர் இருக்குமிடத்தை யடைந்தார். கண்ணனைக் கண்டார். நிகழ்ந்ததை யுணர்ந்தார். பாண்டவரை வாழ்த்திச் சென்றார். பாண்டவர் அன்று ஒரு சோற்றினைக் கண்ணனுக் குதவியதனாலேயே துரு

வாசருடைய சிற்றத்திற்குத் தப்பி அவருடைய வாழ்த் துரைக்கு உரிமையுடையவர்களானார்கள்.

உறக்குந் துணையதோர் ஆலம்வித் தீண்டி
இறப்ப நிழற்பயந் தாஅங்(கு)—அறப்பயனும்
தான்சிறி தாயினும் தக்கார்கைப் பட்டக்கால்
வான்சிறிதாப் போர்த்து விடும்.

அறன்வலியுறுத்தல், செய். 3.

(இ - ள்.) கிள்ளியெடுக்கும் அளவினையுடைதாகிய ஓர் ஆலம் விதையானது மிகுதியாக நிழலைக் கொடுத்தாற்போல, அறத்தி னுடைய பலனும், தான் சிறியதாக விருந்தாலும் தகுதியையுடைய பெரியோர்களின் கையினை யடையுமாயின், விண்ணும் சிறிதென்று சொல்லுமாறு மூடிவிடும்.

௯. பொறுமையிற் சிறந்த புங்கவர்

முன்னாளிற் சமீகர் என்று பெயருடைய ஒரு முனிவர் இருந்தார். அவர் பல நோன்புகளையும் கடைப் பிடித்துச் சிறந்து விளங்கினார். மனைவிமக்களுடன் காட்டிலே தவஞ் செய்துகொண்டிருந்தார். ஒருநாள் ஓரிடத்தில் தனியே அமர்ந்து பொறிகளை யடக்கியிருந் தார். அவர் வெளியுலக நிகழ்ச்சிகள் எவற்றையும் உணராமல் அறிவு நிலைமையில் அமர்ந்திருக்கும்போது அந்த இடத்திற்கு அரசன் ஒருவன் வந்தான். அவ னுடைய பெயர் பரீட்சித்து. அவன் வேட்டைக்காகக் காட்டிற்கு வந்தவன். அவனுக்கு நீர் வேட்கை உண் டாகி வளர்ந்திருந்தது. அவன் பல இடங்களிலும் நீர் தேடினான். இறுதியில் முனிவர் இருக்குமிடத்திற்கு வந்தான். முனிவரைப் பார்த்துச் சிறிது தண்ணீர் வேண்டுமென்று வேண்டிக்கொண்டான். பொறிகளை யடக்கி யாதுமுணரா நிலையில் நின்ற புங்கவர் ஏதும்

பேசாமலிருந்தார். அரசனுக்குச் சினமுண்டாயிற்று. 'நான் நீர் கேட்கிறேன்; நீர் ஒன்றும் பேசாமல் இருக்கிறீரே! இதுதானு முனிவர் அழகு?' என்று எள்ளி நகையாடினுன். நான்கு பக்கங்களினும் நன்கு நோக்கினுன். ஓரிடத்தில் செத்தபாம்பு ஒன்று கிடந்தது. அதனைத் தன்னுடைய வில்லிற் கோத்துத் தூக்கினுன். முனிவருடைய கழுத்தில் மாலையாகப் போட்டுவிட்டுச் சென்ருன்.

சமீக முனிவருக்கு ஒரு மகன் இருந்தான். அவனுடைய பெயர் சிருங்கி. அவன் வேருேர் இடத்தில் தவஞ் செய்துகொண்டிருந்தான். பரிட்சித்து மன்னன் தன் தந்தைக்குப் பாம்பு மாலை போட்டுச் சென்ற செய்தியை அவன் சிலரால் அறிந்தான். அவனுந் தவத்தால் சிறந்த ஆற்றல் பெற்று விளங்கினுன். அவன் தன்னுடைய வாக்கால் யாது கூறினும் அஃது அப்படியே நிகழும். அவன் மிகுந்த சீற்றங்கொண்டான். 'என் தந்தையின் கழுத்திற் பாம்பு மாலையிட்ட மன்னன் பாம்பினுல் கடியுண்டு, ஏழு தினங்களுள் இறக்கக் கடவன்' என்று அவன் கடுமொழி கூறினுன்.

புலனடக்கி நின்ற சமீகர் புறவுலகப் பார்வை பெற்றபோது நிகழ்ந்த செய்திகளை யுணர்ந்தார்; தம் மகனை யழைத்தார். 'அந்தோ! அரசனுக்குத் துன்பம் வருமாறு கடுமொழி கூறலாமா? அவன் உலக மக்களைக் காப்பாற்றுபவனல்லனே? அவன் நம்மை இகழ்ந்து தீமை செய்ததன் பலனுக நிரய வாழ்வடைவானே என்று நாம் வருந்தவேண்டியதாக இருக்க, நீ அவன் இறந்துபடுமாறும் ஆணையிட்டாய்! ஒருவர் நம்மை இகழ்ந்து செய்த தீமையை நாம் பொறுத்துக்கொள்ளாவிட்டால், நம்முடைய தவத்தினுல் என்ன பயன் ஏற்

படும்? என்று கூறிப் பலவாறு வருந்தினர். அரசனுக்குச் செய்தி சொல்லியனுப்பினர். பாதுகாப்பாக இருந்து உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கும் வழி சொல்லிக் கொடுத்தார். பெரியோர்கள் தம்மையிகழ்ந்ததைப் பொறுப்பதுடன் இகழ்ந்தவர்கட்கு நன்மையையும் புரிவார்கள் என்பதை உலகம் இவர்பால் உணர்ந்தது.

தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்
றெம்மை யிகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொ லென்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்.

துறவு, செய். 8.

(இ - ள்.) தம்மை யிகழ்ந்து பேசினவற்றைத் தாங்கள் பொறுத்துக் கொள்வதல்லாமல், எம்மை இகழ்ந்து பேசிய தீவினைப் பயனல், மறுபிறப்பின்கண், கொடிய அளற்றின்கண்ணே வீழ்ந்து வருந்துவார்களே யென்று இரக்கங் கொள்வதும், பெரியோர்களுடைய கடமையாகும்.

௧0. இராமனும் பரசு இராமனும்

I

துருவன் மிக இளைஞனுக இருந்தபோதே பொறிகளையடக்கித் தவஞ்செய்து உயர்ந்த நிலைமையை அடைந்தான். முதியவர்கள் புலனடக்கிச் சிறப்படைந்ததைவிடத் துருவனுடைய நிலைமை அனைவராலுஞ் சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.

II

மிகுந்த பொருள்படைத்த செல்வர்களுடைய கொடை தானும் உலகில் அவ்வளவாகச் சிறப்படைவதில்லை. அருமையாக உள்ள ஒரே ஒரு பொருளையும்

பிறர்க்குக் கொடுத்து விடுகிறவர்கள்தாம் மிகுந்த புகழ்ச்சிக்கு உரியவர்களாகிறார்கள். தன்னிடம் அகப்பட்ட ஒரே ஒரு சிறந்த நெல்லிக்கனியையும் ஔவையாரிடம் அளித்தபடியினால்தான் அதியமானுடைய புகழ் எங்கும் மிகுதியாகப் பரவியது.

III

இராமர் சீதையைத் திருமணம் புரிந்துகொண்டு மிதிலையிலிருந்து அயோத்தியை நோக்கிச் சென்று கொண்டிருந்தார். அப்பொழுது பரசுராமர் என்பவர் வந்து இராமரை எதிர்த்தார். பரசுராமரைக் கண்டு தசரதரும் அஞ்சி நடுங்கித் தளர்ந்து சோர்ந்துவிட்டார். இராமரை நோக்கிப் பரசுராமர், "நான் உன்னுடைய குலப் பகைவன். உன்னைக் கொல்லும்பொருட்டு வந்திருக்கிறேன். நீ மிகவும் சிறியவனாக இருக்கின்றாய். நான் உன்னுடைய ஆற்றலையறிய விரும்புகிறேன். இந்த வில்லை வளை; உன்னுடைய ஆற்றலைப் பார்க்கலாம்" என்று கூறித் தம்முடைய கையிலிருந்த ஒரு வில்லை நீட்டினார். இராமர் அந்த வில்லை எளிதாக வளைத்தார். கூரிய கணை ஒன்றை அந்த வில்லில் தொடுத்தார். பரசுராமர் அரசர் குலத்தை இருபத்தொரு முறை கருவறுத்த கொடியவராக இருப்பினும் இராமர் அவரைக் கொன்றுமுடிக்க விரும்பவில்லை. பரசுராமரைவிடப் பன்மடங்கு மிகுந்த ஆற்றல் படைத்த இராமர் பரசுராமர் குற்றங்களையெல்லாம் பொறுத்தார். "நான் உனக்கு உயிர் அளித்தேன் பிழைத்தோடிப்போ; இனிமேல் அரச குலத்தினரைக் கொலைபுரிந்து, பழிக்கும் பாவத்திற்கும் ஆளாகாதே" என்று அறவுரை கூறிப் பரசுராமரைக் கொல்லாது விட்டுவிட்டார். பரசுராமரைக் கொன்றுவிடக்கூடிய

இராமர் அன்று கொல்லாமல் குற்றத்தைப் பொறுத்து மன்னித்து விட்டதைப் பலரும் பெரிதும் புகழ்ந்து பேசினர். 'ஒறுக்கும் மதுகை உரனுடை யாளன் பொறுக்கும் பொறையே பொறை,' என்பதையும் இராமனிடங் கண்டு தெளிந்தனர்.

இளையான் அடக்கம் அடக்கம் கிளைபொருள்
இல்லான் கொடையே கொடைப்பயன்—எல்லாம்
ஒறுக்கும் மதுகை உரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை.

சினமின்மை, செய். 5

(இ - ள்.) இளமையுடையவன் புலனடக்கி நிற்றலே நல்ல அடக்கம்; வளருகின்ற பொருளற்றவன் கொடுக்கின்ற கொடையே பயனுள்ள கொடையாகும்; யாவையும் ஒறுக்கத்தக்க வெற்றியும், ஆற்றலும், உடையவன் பிறர் குற்றத்தினைப் பொறுக்கின்ற பொறுமையுடைமையே நல்ல பொறுமையுடைமையாகும்.

௧௧. கண்ணனும் கண்ணிலான் மகனும்

கண்ணபிரான் பாண்டவர் பொருட்டுத் துரியோதனனிடந் தூது சென்றார், கண்ணிலான்மகன் கண்ணனைப் பொருட்படுத்தவில்லை. பலவாறு இகழ்ந்தான். கண்ணனைத் தனக்குப் பகைவனாக எண்ணினான். அப்பண்ணவனைக் கொன்று முடிக்கவுஞ் சூழ்ச்சி செய்தான். தன் நண்பர்களுடன் கலந்து எண்ணமிட்டான். அவைக்களத்திலே ஒரு பெரிய படுகுழியை வெட்டினான். ஆயிரக்கணக்கான மல்லர்களை அக்குழிக்குள்ளே படைக்கலங்களுடன் அமைத்தான். குழிவெட்டியுள்ள செய்தி தெரியாமல் மேலே பண்படுத்தினான். ஓர் அழகிய இருக்கையை அதன்மீது அமைத்தான். கண்ணபிரானைப் பணிவுடன் அழைத்தான். அவ்

விருக்கைமீது அமர்ந்தருளுமாறு வேண்டிக்கொண்டான். சூதினையுணராக் கண்ணன் யாதும் உணராமல் இருக்கையில் ஏறி இருந்தார். உடனே இருக்கை படுகுழிக்குள் நரநர வென்னும் ஒலியுடன் புகுந்தது. அவ்வளவில் கண்ணபிரான் சூழ்ச்சியை யுணர்ந்தார். மாட்சிமிக்க பெருவடிவங் கொண்டார். குழிக்குள் இருந்த மல்லர்கள் அனைவரும் கண்ணன் காலில் அகப்பட்டு நெரியுண்டு விண்ணகம் புகுந்தனர்.

கண்ணன் துரியோதனனை ஒன்றுஞ் செய்யவில்லை. அவனைக் கொன்று தொலைக்க நினைத்திருப்பின் உடனே முடித்திருக்கலாம். வஞ்ச நெஞ்சனாகிய துரியோதனனை எதிர்க்காமல் அவர் அவன் செய்த குற்றங்களைப் பொறுத்துக்கொண்டு யாதுஞ் செய்யாமற் சென்று விட்டார்.

அவையிலிருந்த வீடுமர் துரோணர் முதலிய பெரியார்கட்குக் கண்ணன் ஆற்றல் நன்கு தெரியும். கண்ணன் பேசாமல் சென்றது ஆற்றல் இல்லாதபடியினால் அல்ல. கண்ணிலான் மகனைத் தாம் எதிர்ப்பது இழிவாக முடியுமென்றே பேசாமற் செல்லுகின்றார் என்று அவர்கள் உணர்ந்தனர்.

தீங்கு செய்த துரியோதனனுக்குத் தீங்கு செய்யாமையும், எதிர்க்காமற் சென்றமையும் கண்ணபிரானுடைய சீர்த்தியை மிகுதிப்படுத்தின.

மாற்றாராய் நின்றுதம் மாறேற்பார்க் கேலாமை
ஆற்றாமை யென்னா ரறிவுடையார்—ஆற்றாமை
நேர்த்தின்னா மற்றவர் செய்தக்கால் தாமவரைப்
பேர்த்தின்னா செய்யாமை நன்று.

சினமின்மை, செய். 7.

(இ - ள்.) பகைவர்களாக அமைந்து தம்மோடு மாறுபடும் அவர்க்கு, எதிர்க்கப் பொருந்தாமையை, அறிவு அமையப்பெற்றவர்கள் ஆற்றலில்லாமை என்று கூறமாட்டார்கள். பொறுத்தற் கியலாவாறு எதிர்த்து, அப்பகைவர்கள் துன்பங்களைச் செய்தவிடத்து, தாங்கள் அப்பகைவர்க்கு மீளத் துன்பஞ் செய்யாதிருத்தல் நல்லது.

கஉ. சேர்ந்தாரைக் கைவிடாத் திண்ணியன்.

முன்னாளிற் பாஞ்சாலங்குறிச்சியை ஆண்டிருந்த வீரபாண்டியக் கெட்டிபொம்மு என்பவனிடம் சுப்பிரமணிய பிள்ளை என்பவன் செயலாளனாகவும் படைத்தலைவனாகவும் அமர்ந்திருந்தான். முன்னர் நல்லவனாக அமைந்துநின்ற அவன் பின்பு தீக்குணங்கள் பல சேரப்பெற்றான். தன் தலைவனைக் கேளாமலே பல செயல்களைத் தன் மனம்போனவாறு செய்தான். ஆங்கிலேயர்கள் ஓரிடத்தில் வைத்திருந்த நெல்லைக் கொள்ளையடித்தான். அதனால் ஆங்கிலேயர்கட்கும் பாஞ்சாலங்குறிச்சியினருக்கும் பகை மூண்டது. பகை மூள்வதற்கு ஏதுவாக நின்ற செயலாளனை விலக்கிவிட வேண்டுமென்று ஆங்கிலேயர்கள் தெரியப்படுத்தினர். வேறு பலரும் அதற்கு உடன்பட்டுச் செயலாளனை விலக்கி விடுதலே நல்லதென்றனர். வெள்ளையர்கள் கட்டாயமாக அக்கொள்ளையனை விலக்கிவிட வேண்டுமென்று வற்புறுத்தினர்.

வீரபாண்டியக்கெட்டிபொம்மு யாருடைய பேச்சுக்கும் காது கொடுக்கவில்லை. என்னை நம்பியுள்ள செயலாளனைக் கைவிட முடியாது என்று உறுதியாகக் கூறிவிட்டான். மேலுந் தன்னை நம்பிய அச்செயலாளன் சொற்படியே நடந்தான். தன்னை நம்பியிருந்த செயலாளனைக் கைவிடாதபடியினால்தான் அவனுக்கு அல்லல்கள் பலவும் நேர்ந்தன. ஆயினும் அவன் அவை

களை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை. தன்னை நம்பியுள்ளவனைக் கைவிடக்கூடாது என்பதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்தான். வீரபாண்டியக் கெட்டிபொம்முவினுடைய இந்த முடிவே அவனுக்கு விரைவில் அழிவை உண்டாக்கியது. ஆயினும் பலரும் வீரபாண்டியக் கெட்டிபொம்முவினுடைய நட்புத் திறத்தையும் நம்பினரைக் கைவிடாப் பெருந்தன்மையையும் மிகுதியாகப் பாராட்டினார்கள்.

> இன்னா செயினும் இனிய வொழிகென்று
> தன்னையே தானோவின் அல்லது—துன்னிக்
> கலந்தாரைக் கைவிடுதல் கானக நாட
> விலங்கிற்கும் விள்ளல் அரிது.
>
> போறையுடைமை, செய். 6.

(இ - ள்.) காட்டையும் நாட்டையு முடையவனே! துன்பங்களைச் செய்தாலும், அவைகளை இனியனவாகக்கொண்டு தன்னைத் தானே நொந்து கொள்வதல்லாமல், பொருந்தி நண்புகொண்டவர்களைக் கைவிட்டுவிடுதல், விலங்குகளுக்குக்கூடச் சொல்லுதல் அருமை.

கங. புண்ணியகோட்டி முதலியார்

I

தொண்டைநாட்டிலே முன்னாளில் ஒரு முதலியார் இருந்தார். அவருடைய பெயர் கோட்டி முதலியார். அவர் மிகுந்த செல்வம் படைத்தவர். அவருக்கு ஈகைக் குணம் உடைய உள்ளமும் அமைந்திருந்தது. இரவலாளர்கள் தம்மிடம் வந்து வாய்திறந்து ஒன்றினைக் கேட்குமுன் அவர் குறிப்பறிந்து கொடுப்பார். இரவலாளர்களிற் பலர் வாய் திறந்து எவரிடமும் எதையுங் கேட்பதற்கு மிகவும் நாணுவார்கள். அத்தகையோர் பொருட்டு முதலியார் ஓர் அரிய ஏற்பாடு செய்திருந்

தார். அஃதாவது இவர் தம்முடைய வீட்டு வாசலிலே வெள்ளிய மணலைக் கொட்டிப் பரப்பியிருந்தார். வாய் திறந்து கேட்பதற்கு நாணுபவர்கள் தமது உள்ளக்கிடக்கையை அம்மணலின்மீது எழுதிக்காட்டினாற் போதும். உடனே முதலியார் களிப்புடன் இரவலாளர்கள் விரும்பியதை யளிப்பார். அவர் நல்வினையாகிய புண்ணியத்தை நாள்தோறும் மிகுதியாகத் தேடியபடியால் அவருடைய பெயர் புண்ணியகோட்டி முதலியார் என்று வழங்கிநின்றது.

பலரும், புண்ணியகோட்டி முதலியார் ஊர் நடுவே பலருந் தங்கும் அம்பலத்திடத்தே காய்த்து விளங்கும் பனைமரத்தைப்போல், பலருக்கும் பேருதவியாக அமைந்து நிற்கின்றார் என்று பெரிதும் போற்றினார்கள். படிக்காசுப் புலவர் முதலிய அறிஞர்கள் புண்ணிய கோட்டி முதலியாரின் சீர்த்தியை வியந்து பாடியிருக் கின்றார்கள்.

II

பாண்டிநாட்டில் ஒரு செல்வன் இருந்தான். அவன் அளவு கடந்த பொருள் திரட்டியிருந்தான். ஆயினும் யாருக்கும் எதனையுங் கொடான். யாரேனும் அவனிடஞ் சென்றாலோ சீறிக் கடுகடுத்து வைது விரட்டுவான். அதனால் அவனிடம் யாரும் நெருங்கமாட்டார்கள். அவன் இடுகாட்டிலுள்ள ஆண்பனையைப்போல் இருக்கின்றான் என்று பலரும் அவனைத் தூற்றினார்கள்.

நடுவூருள் வேதிகை சுற்றுக்கோட் புக்க
படுபனை யன்னர் பலர்நச்ச வாழ்வார்
குடிகொழுத்தக் கண்ணுங் கொடுத்துண்ணா மாக்கள்
இடுகாட்டுள் ஏற்றைப் பனை.

ஈகை, செய். 6.

(இ - ள்.) பலரும் விரும்பும்படியான நிலைமையில் வாழ்கின்றவர்கள், ஊர் நடுவின்கண் திண்ணையானது சூழ்ந்திருக்க, காய்த்த பனைமரத்துக்கு ஒப்பாவர்; செல்வம் நன்கு பெருகியவிடத்தும், பிறருக்குங் கொடுத்துத் தாமு முண்ணாதவர்கள், சுடுகாட்டில் இருக்கும் ஆண் பனையைப் போன்றவர்களாவர்.

கசா. வினையை வெல்லுதல் முடியாது

ஆணி மாண்டவியர் என்னும் பெரியார் பழவினைப் பயனாகக் கழுவிலே ஏற்றப்பட்டார். அப்பெருந் துன்பத்தினைத் தடுத்து நிறுத்த அவரால் முடியவில்லை. உலகம் போற்றும் பெரியாராக விளங்கிநின்ற காந்தியடிகளுக்கு யாருந் தீங்கு செய்துவிடாதவாறு தகுந்த பாதுகாப்பு ஏற்படுத்தப் பெற்றிருந்தது. அவர் செல்லுங் கூட்டங்களிலெல்லாம் தகுந்த பாதுகாப்புக்குரிய ஏற்பாடுகளை மறைமுகமாகச் செய்துகொண்டுதான் இருந்தார்கள். அவ்வாறாகவும் பல பொது மக்களும் ஊர்க்காவல்மள்ளர்களும் கூடியிருந்த விடத்திலேயே ஒரு தீவினையாளன் காந்தியடிகளைச் சுட்டுக் கீழே தள்ளிவிட்டான். யாராலும் அதனைத் தடுக்க முடியாமலே போய்விட்டது. காந்தியடிகள் பிறவுயிர்கட்கு உறும் துன்பத்தைத் தமக்கு வந்ததாக எண்ணி நீக்கும் இயல்பு வாய்ந்தவர். எக்காரணத்தை முன்னிட்டும் ஓர் உயிர்க்குந் தீங்கினைப் புரியார். அத்தகைய நல்வினையாளராலுந் தமக்கு வந்த துன்பத்தை வராதவாறு தடுக்க முடியாமலே போய்விட்டது.

அடிக்கடி நமது நாட்டிலே மழை பெய்தலைக் காண்கிறோம். எப்பொழுதும் ஓர் அளவுடனே திட்டத்துடனே பெய்யும் இயல்பு முகில்கட்கு இல்லை. ஒரேயடியாக மழை பெய்யாமலும் போய்விடும்;

பெய்யத் தொடங்கின் மிகுந்த அளவிற் பெய்து அழிவை உண்டு செய்யினுஞ் செய்யும். முகில்களின் இத்தன்மையைத் தடுத்து அதனைத் தகுந்த அளவிற் பெய்யுமாறு செய்வித்தல் எவராலும் இயலாது. இதற்குக் காரணம் யாதோவெனின், முகில்களின் மடமையன்று. மக்களின் பழவினையே யாகும். மக்களின் நன்மை தீமைகளின் விளைவு நாடியே மழையின் தன்மையும் அமைந்து நிற்கின்றது.

உறற்பால நீக்கல் உறுவர்க்கும் ஆகா
பெறற்பால் அனையவும் அன்னவாம்—மாரி
வறப்பில் தருவாரும் இல்லை அதனைச்
சிறப்பில் தணிப்பாரும் இல்.

பழவினை, செய். 4

(இ - ள்.) வரக்கூடிய தீயவைகளை வராதவாறு விலக்குதல் தவத்தினையுடையவர்களுக்கும் இயலாது; பெறக்கூடிய நல்வினைகளும் அவ்வாறே விலக்குதல் முடியாதாம். அதைப்போல மழையானது பெய்யாமல் காய்ந்தால், அதனைப் பெய்விப்பவர்களும் இல்லை; அம்மழை மிகுதியாகப் பெய்யுங் காலத்தில், அதனைப் பெய்யாமல் நிறுத்தக் கூடியவர்களும் இல்லை.

கரு. அறிவிலிகளை நமனும் விரும்பான்

ஒரு மாணவன் ஆசிரியர் ஒருவரிடத்திலே இலக்கண இலக்கியங்களை இனிது கற்றுக்கொண்டிருந்தான். அதிற் பல புலவர்களும், தேச விடுதலைக்காகப் பாடுபட்ட நல்லோர் சிலரும், கற்புமிக்க பெண்கள் பலரும் மிக மிக இளமைக் காலத்தே இவ்வுலக வாழ்வை நீத்தார்கள், என்னுஞ் செய்திகள் தெரிந்தன.

அல்லற்பட்டுக் கல்வி முதலியவைகளில் சிறந்த அறிஞர்கள் இவ்வாறு இளமைக் காலத்தில் இவ்வுலக வாழ்

வைத்துறந்து போகக் காரணம் யாது என்று எண்ண மிட்டுப்பார்த்தான். அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. அவன் தன்னுடைய ஆசிரியரைப் பார்த்துப், 'பெரும் புலவர் இளம்பருவத்திலே இவ்வுலக வாழ்வை நீத்திருக் கிறார்களே; அதற்குக் காரணம் யாது?' என்று கேட்டான்.

அப்பொழுது ஆசிரியர் தம் மாணவனைப் பார்த்து இந்தப் பாட்டினைக் கூறி இதன் பொருளையும் விளக்கி னார். மாணவன் உண்மை யுணர்ந்து உளந்தெளிந் தான்.

பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் வீயவும்
கல்லாதார் வாழ்வ தறிதிரேல்—கல்லாதார்
சேதனம் என்னுமச் சேறகத் தின்மையால்
கோதென்று கொள்ளாதாங் கூற்று.

பழவினை, செய். 6.

(இ - ள்.) பல நூல்களையும் கற்றுணர்ந்த கேள்வியினாலே உண்டாகும் பயனையறியக் கூடியவர்கள் இறக்கவும், கல்வியறிவற் றோர் நீணாள் வாழ்தற்கும் நீவிர் காரணம் உணரவிரும்புவீர்களாயின், கல்வியறிவில்லாதவர்களிடத்தில், அறிவு என்று சொல்லப்பெறுகிற அந்தச் சாரமானது உள்ளத்திடத்லே இல்லாதபடியால், கூற்று னது அறிவற்றவன் 'சக்கை' என்று நினைத்து கொள்ளமாட்டாதாம்.

கக. ஔவையாரும் கோரைக்காலாழ்வானும்

கோரைக்கால் ஆழ்வான் என்னும் பெயருடைய ஒருவன் ஔவையார் காலத்திலே வாழ்ந்திருந்தான். அவன் நல்ல செல்வம்படைத்தவன். ஔவையார் பரி சில விரும்பி அவனிடஞ் சென்றார். முதல் முறை சென்றபொழுது அவன் ஔவையாருடைய பாட்டைக் கேட்டான். வியந்து மகிழ்ந்தான். இரண்டு நாட் பொறுத்து வந்தால் ஒரு யானை தருகிறேன் என்றான்.

ஔவையார் அப்படியே இரண்டு நாட்பொறுத்துச் சென்றூர். என்னிடம் இப்பொழுது யானே நல்லதாக இல்லே. சிலநாட்பொறுத்து வந்தால் ஒரு நல்ல குதிரை தருகிறேன் என்று கூறினுன். ஔவையார் அப்படியே சிலநாட்பொறுத்துச் சென்றூர். என்னிடம் இப்பொழுது குதிரை இல்லே; சிலநாட் சென்று வந்தால் ஒரு கரிய பெரிய எருமை தருகிறேன் என்றுன். ஔவையார் அதற்கும் இணங்கி அப்படியே சென்றூர். இப்பொழுது எருமை இல்லே; சிலநாட் பொறுத்து வந்தால் ஓர் எருது தருகிறேன் என்றுன். ஔவையார் அதற்கும் இணங்கிச் சிலநாள் பொறுத்துச் சென்றூர். இப்பொழுது எருதும் இல்லே; சிலநாட் பொறுத்து வந்தால் ஒரு புடவை கொடுக்கிறேன்; உடுத்திக்கொள்ளலாம்; அதுதான் தங்கட்கு மிகவும் பயனுடையது என்றுன். கொடாக்கண்டனுகிய அவனுடைய கூற்றுக்கு வியப்படைந்த ஔவையார் விடாக்கண்டியாக மேலுஞ் சில நாள் பொறுத்துச் சென்றூர். ஔவையார் தன்னே விடாமல் வந்து கேட்டலேக்கண்ட அவன் நாம் இல்லே யென்று சொன்னுல்தான் கிழவி நம்மை விடுவாள்போ லிருக்கின்றது என்று எண்ணியவனுய் 'என்னிடம் புடவையுங்கிடையாது; வீணுக வந்து ஏன் அலேகிறீர்கள்? இனி வருவதால் யாதும் பயனில்லே' என்று கூறினுன்.

முதலில்தானே 'இல்லே' என்று சொல்லியிருந்தால் நாம் இவ்வாறு பலமுறை வீணில் அலேந்து தொல்லேப் பட நேர்ந்திருக்காது. நம்மை இவ்வாறு வீணில் அலேந்து வருந்தச்செய்தானே என்று ஔவையாருக்கு மனவருத்தம் உண்டாயிற்று. கோரைக்காலாழ்வான் செய்கையைக் குறித்து, 'கரியாய்ப் பரியாகிக் காரெருமை தானுய்,

எருதாய் முழப்புடவை யாகித்—திரிதிரியாய்த், தேரைக் கால் பெற்றுமிகத் தேய்ந்துகால் ஓய்ந்ததே, கோரைக்கா லாழ்வான் கொடை' என்று செய்யுள் ஒன்று பாடிச் சென்றார். ஔவையாரிடம் பொய் கூறிய குற்றத்தால் கோரைக்கால் ஆழ்வானுடைய செல்வம் நாளடைவிற் குன்றியது. எனவே, ஒருவர் ஒருவர்க்கு ஒரு பொருளினைத் தருகிறேன் என்று கூறிப் பின் இல்லை யென்று சொல்வது செய்ந்நன்றி கொன்றாற்போன்ற குற்றத்தை விளைவிப்பதாகும்.

இசையா வொருபொருள் இல்லென்றல் யார்க்கும்
வசையன்று வையத் தியற்கை—நசையழுங்க
நின்றோடிப் போய்த்தல் நிரைதொடீஇ செய்ந்நன்றி
கொன்றாரிற் குற்ற முடைத்து.

மெய்ம்மை, செய். 1.

(இ - ள்.) வரிசையாக அணிந்த வளையல்களையுடையவளே! தம்மிடம் இல்லாத ஒரு பொருளைக் கேட்பவர்க்கு இல்லையென்று சொல்லுதல் எவருக்குங் குற்றமன்று; உலகில் அஃது இயற்கையே யாகும். விருப்பமானது கெடுமாறு, நெடுங்காலம் நின்று பொய் சொல்லுதல், செய்ந்நன்றி கொன்றவர்களைப்போலக் குற்றமுண் டாக்குவதாகும்.

௧எ. கூட்டுறவால் கெட்ட கன்னன்

கன்னன் குந்தியினுடைய மகன். பாண்டவர் ஐவருக்கும் மூத்தவன். குந்திதேவி சிறுமியாகவிருக்கும் போது ஒரு மந்திரபலத்தால் கதிரவனைச் சேர்ந்து கன்னனைப் பெற்றாள். கன்னியாகிய தான் மகப்பெற்றதைக் கண்டு மற்றையோர் இகழ்வார்களே யென்று அஞ்சி ஒரு பேழையில் வைத்து ஆற்றில் போக்கினாள். தேரோட்டி ஒருவன் பேழையைக் கண்டெடுத்துத் திறந்து பார்த்தான். கன்னனைத் தன் மகன் என்று

பேர் செய்து வளர்த்தான். ஊழ்வினை துரியோதன ேைடு கன்னனைக் கூட்டிவிட்டது. செம்மை நலம் படைத்துச் சிறந்திருந்த கன்னன் நூற்றுவரோடு சேர்ந்த பின் உள்ளந்திரிந்தான். துரியோதனன் பாண்டவர்கட்குச் செய்த தீமைகள் பலவற்றிற்கும் துணைபுரிந்தான். தானும் நூற்றுவர்களுள் ஒருவனைப்போன்றே தீயவனுக விளங்கினின்ருன். பிறகு பாரதப்போர் நிகழத் தொடங்கியது. கண்ணபிரான் கண்ணிலான் மகனிடந் தூது சென்ருர். அப்பொழுதுதான் கன்னனுக்குத் தான் பாண்டவர்களின் முன்னேன் என்று விளங்கியது.

குந்திதேவி கன்னன் தன் மகன் என்பதைக் கண்ண பிரானுல் உணர்ந்து, ‘அந்தோ! நம் மகன் தீயவர்களைச் சேர்ந்து தீயவனுகிவிட்டானே!’ என்று வருந்தினுள். கன்னன் இறந்தபிற்பாடு எல்லோருக்கும் கன்னன் குந்தியின் மகன் என்று தெரிந்தது. பலரும் கன்னன் தீயவர்களாகிய நூற்றுவர்களைச் சேர்ந்து வீணே கெட்டொழிந்தானே என்று இரங்கினுர்கள். தீயவர்களைச் சேர்ந்தால் நல்லவர்களுந் தீயவர்களாவார்கள் என்னுஞ் செய்தியைக் கன்னன் வாயிலாக அனைவரும் உணர்ந்து கொண்டார்கள்.

நெருப்பழற் சேர்ந்தக்கால் நெய்போல் வதூஉம்
எரிப்பச்சுட் டெவ்வநோய் ஆக்கும்—பரப்பக்
கோடுவினைய ராகுவர் கோடாருங் கோடிக்
கடுவினைய ராகியார்ச் சார்ந்து.

தீவினையச்சம், செய். 4.

(இ - ள்.) தீயினது வெம்மையைச் சேர்ந்தவிடத்திலே, நெய் போன்ற குளிர்ச்சி மிக்க பொருளும், எரியுமாறு சுடுதலைச்செய்து, துன்பந்தரும் நோயை உண்டாக்கும்; அதைப்போல அறநெறி பிறழாதவர்களும், கொடுமையான வினையையுடையவர்களைச் சேர்ந்து, மிகவும் தீவினையையுடையவர்களாவர்.

௧௫. கல்வியழகே அழகு

சோழநாட்டிலே உறையூர் என்னும் ஊர் ஒன்று சிறந்து விளங்குகின்றது. அவ்வூரிலே பல்லாண்டுகட்கு முன்னர் மங்கை ஒருத்தி சிறந்து திகழ்ந்தாள். அவளுடைய பெயர் சண்பகம். சண்பகம் பேரழகுடன் விளங்கினாள். பல நூல்களையும் இளமையிலேயே நன்கு கற்றுப் புலமை நிரம்பப்பெற்றிருந்தாள். அம் மங்கையினிடத்திலே அறிவு அழகு இளமை ஆகியன ஒருங்கே அமைந்து திகழ்ந்தன. மாண்புமிக்க மங்கையை மணமகளாகக்கொள்ள மன்னர்களும் பிறரும் எண்ணினர்.

சண்பகவடிவு அறிவுநலம் மிக்காளாதலின் எவரையும் ஒரு பொருளாக மதிக்கவில்லை. வெறும் அழகும் இளமையும் உடையவர்களை அவள் வெறுத்தகற்றினாள். தன்போல் அறிவு அழகு இளமை ஆகியன ஒருங்கமையப்பெற்றவனையே மணந்து மகிழத் துணிந்திருந்தாள். தன்னை மணக்க முயன்று வருபவர்கள் தான் கேட்கும் கேள்விகள் சிலவற்றிற்கு நுணுக்கமாகப் பதிலளித்தல் வேண்டுமெனவும், அவ்வாறளிப்பவர்கட்கே தான் இணக்கமாவதாகவும் வணக்கமாகத் தெரியப்படுத்தினாள். பாவையின் கேள்விக்குப் பதிலளிக்கப் பலரும் முயன்றனர். முடியவில்லை. மங்கையின் கேள்வி கடுமையாக இருந்தது. காதலித்து வந்த காளைகள் உள்ளம் பேதலித்துச் சென்றனர்.

நுண்மாண் நுழைபுலம் மிக்கான் ஒருவன் பெண்மணியின் கேள்விகட்குத் தக்கவாறு பதிலளித்தான். அவன் சங்கப் புலவர்களைச் சார்ந்து தங்கிப் படித்தவன். அவனையே சண்பகவடிவு மணமகனாகக் கொண்டு

மகிழ்ந்தாள். தம்மைப் பலவாறு அழகுபடுத்திக் கொண்டுவந்த பலரையும் அவள் இழிவுபடுத்தியனுப்பி யமையைக் கண்டோர், 'மங்கை குஞ்சியழகையுங் கொடுந்தானைக் கோட்டழகையும் நெஞ்சிற் கொள்ளா மல் கல்வி யழகுடையானையே நாடினாள். ஆதலின் கல்வியழகே சிறந்த அழகு' என்று தெளிந்து மகிழ்ந்தனர்.

குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்
கல்வி அழகே அழகு.

கல்வி, செய். 1.

(இ - ள்.) மயிரினுடைய அழகும், மடிப்புள்ள ஆடையின் கரைக்கோட்டினது அழகும், மஞ்சளினுடைய அழகும் நல்ல அழகு கள் ஆகமாட்டா. உள்ளத்தின்கண்ணே நாம் நல்லவர்களாக இருக் கின்றோமென்கிற நடுவுநிலைமைக் குணத்தினால், கல்விச் சிறப்பி னால் உண்டாகும் அழகே சிறப்புடைய அழகாகும்.

கஅ. மெய்ம்மையிற் சிறந்த வேந்தன்

அரிச்சந்திரன் உண்மை பேசுவதிற் சிறந்து விளங் கினான். அரிச்சந்திரனுடைய வாய்மையின் மாண்பைப் பற்றி விண்ணுலகிற் பேச்சு வந்தது. ஒரு முனிவர் அரிச்சந்திரன் மெய்ம்மையிற் சிறந்தவன் என்று அவனைப் புகழ்ந்து பேசினார். மற்றொரு முனிவரோ அரிச்சந்திரனுடைய வாய்மையை ஒப்புக்கொள்ளாமல் அவன் பொய்யும் பேசுவான் என்று கூறினார். அவ்வாறு கூறிய முனிவருடைய பெயர் கௌசிகர். அவர் அரிச்சந்திரனை யடைந்து அவனைப் பொய்யனாக்கப் பெரிதும் முயன்றார். பலவகைச் சூழ்ச்சிகளைச் செய் தார். நாடு நகரங்களைக் கவர்ந்தார். மனைவி மக்களைப்

பிரித்தார். அரிச்சந்திரனையும் ஒரு புலையனுக்கு அடிமை யாகுமாறு செய்தார்.

அரிச்சந்திரன் கடுமையான துன்பங்களை நுகர்ந்து கொண்டிருக்கும்போது முனிவர் அவனைப் பார்த்து, 'ஒரே ஒரு பொய் சொன்னாலும் போதும்; எல்லாத் துன்பங்களையும் ஒரு நொடியில் நீக்கிவிடுகிறேன்' என்று மனதைக் கலைக்க முயன்றார். அவைகட்கெல்லாம் அரிச்சந்திரன் ஒரு சிறிதும் நிலை கலங்கவில்லை. தன்னுடைய பொய்யாமைக் கொள்கையையே உறுதியாகக் கடைப்பிடித்து நின்றான். அதனால் அவனுக்கு இறுதியில் பலவகை நலங்கள் உண்டாயின. அவன் இக்காலத்தும் எல்லோராலும் 'உண்மையிற் சிறந்தவன் அரிச்சந்திரன்' என்று போற்றிப் புகழ நின்றான். 'உடுக்கை உலறி உடம்பழிந்தக் கண்ணுங் குடிப்பிறப் பாளர் தங்கொள்கையிற் குன்றார்' என்பதை உலகம் அரிச்சந்திரன்பாற் கண்டுமகிழ்ந்தது.

உடுக்கை யுலறி உடம்பழிந்தக் கண்ணும்
குடிப்பிறப் பாளர்தங் கோள்கையிற் குன்றார்
இடுக்கண் தலைவந்தக் கண்ணும் அரிமா
கோடிப்புற் கறிக்குமோ மற்று.

துடிப்பிறப்பு, செய். 1.

(இ - ள்.) நல்ல குடியிலே பிறந்தவர்கள் உடையானது கெட்டு, உடலானது அழியும்படியாக நேர்ந்தபொழுதும், தங்களுடைய நன்னடக்கையிற் சிறிதும் குறைவுபடமாட்டார்கள். கோளரியானது பசித் துன்பம் மிகுதியாக எற்பட்டவிடத்தும், கொடிகளையுடைய புல்லைத் தின்னுமோ?

௨௦. தடங்குடித் தோன்றிய இடங்கழியடிகள்

இடங்கழியார் என்பவர் அறுபத்துமூன்று நாயன்மார்களிலே ஒருவர். கோனாட்டுக் கொடும்பாளூரிலேயிருந்து அரசுபுரிந்தவர். குறுநிலமன்னர்; பெருந்தன்மையமைந்தவர். அன்பும் அருளும் அமையப்பெற்றவர். தாயைப்போல் அமைந்து தங் குடிகளைப் பேணினார். இரவலர்களைக் கண்டால் இன்னுரையாடிப் போற்றிப் பலவகைப் பரிசுகள் வழங்குவார். இறைவனிடத்திலேயும் இறைவனுடைய அடியார்களிடத்திலேயும் பேரன்பு மிக்கவர். சிவனடியார்களைப் பெரிதும் போற்றி வழிபட்டவர்.

ஒரு நாளிரவு கள்வன் ஒருவன் களவு செய்தற்கு வந்தான். அகப்பட்டுக்கொண்டாலும் அல்லல் செய்ய மாட்டார்கள் என்னும் எண்ணத்துடன் சிவனடியான் போலப் பொய்க்கோலம் பூண்டு கொண்டு வந்தான். நெற்களஞ்சியத்திற்குச் சென்று நெல்லை வாரி மூட்டை கட்டினான். களஞ்சியக் காவலாளர் கள்வனைக் கண்டு விட்டனர். ஆகவே அவர்கள் அவனைப் பிடித்து அவன் கால் கைகளைக் கட்டினர். இடங்கழியார் முன்னே கொண்டுபோய் நிறுத்தினர். கள்வன் கட்டையவிழ்த்தும்படி அவர் கட்டளையிட்டார். காவலாளரும் அப்படியே அவிழ்த்துவிட்டனர். இடங்கழியார் கள்ளச் சிவனடியாரைப் பார்த்து, 'ஏன் என்னுடைய நெல்லைக் களவுசெய்து போக முயன்றீர்?' -என்று கேட்டார். கள்ளச் சிவனடியான் 'உண்பதற்கு யாதுமில்லை; உணவின்பொருட்டே இப்படிச் செய்தேன்' என்று இயம்பினான்.

கள்வன் கூறியதைக் கேட்ட இடங்கழியார் அடங்கா மகிழ்ச்சிகொண்டார். வறுமைக் கொடுமையால் நம் நாட்டிற் பலர் வருந்துகிறார்கள் போலும் என்று எண்ணினார். களஞ்சியத்தைத் திறந்து போட்டுச் சூறையாடும்படி கட்டளையிட்டார். வறுமை மிக்கவர்கள் மகிழ்ச்சி மிக்கார்களாய்த் தத்தமக்கு வேண்டிய வாறே வாரிச் சென்றனர். இடங்கழியாருடைய உயரிய மனப்பான்மை எல்லோராலும் புகழ்ந்து போற்றப்பெற்றது. அவருஞ் சிறந்த நிலையை யடைந்து இன்றும் உயர்ந்த நிலையில் அமைந்துள்ளார். இனநன்மை, இன்சொல், ஈதல், மனநன்மை முதலிய திருந்திய பண்புகளெல்லாம் இவரிடம் பொருந்தி யுள்ளமையை இனிது கண்டுணர்க.

> இனநன்மை யின்சோலொன் றீதல்மற் றேனை
> மனநன்மை யென்றிவை யெல்லாம் — கனமணி
> முத்தோ டிமைக்கும் முழங்குவரித் தண்சேர்ப்ப
> இற்பிறந்தார் கண்ணே யுள.

குடிப்பிறப்பு, செய், 6.

(இ - ள்.) பொன்னையும் மணிகளையும் முத்துக்களுடன் விளங்கச் செய்யும் ஒலிக்கின்ற குளிர்ந்த கடலையும் கடற்கரையையும் உடைய பாண்டியனே! நல்லினச் சேர்க்கையும், இன் சொல்லாடுதலும், ஒரு பொருளை இரவலர்க்களித்தலும், ஒழிந்த நல் மனம் என்று சொல்லப் பெறுகிற இவைகளெல்லாம், நற்குடியிற் பிறந்தவர்களிடத்திலேதான் சிறப்பாக அமைந்துள்ளன.

உக. கொடைநலத்திற் சிறந்த குமணன்

குமணன் என்பவன் கொடைநலத்திற் சிறந்தவன். தன்பா லிரப்போர்க்குப் பெரும் பொருள் வழங்கி அரும் புகழ் அடைந்தவன். குமணனுக்கு அமணன் என்னும் பெயருடைய இளவல் ஒருவன் இருந்தான். அவன் அறிவிலார் நட்பைப்பெற்றிருந்தான். அமணனுடைய நண்பர்கள் அமணனைப் பார்த்து, 'உன் அண்ணன் பொருளைக் கண்டபடி வாரி வீசுகின்றான். இவ்வாறு செய்வதனால் இறுதியில் ஏற்படும் பொருளிழப்பு உன் தலையில்தான் முடியும். ஆகையால், நீ விழிப்புடன் இருக்கவேண்டு'மென்று கூறி அவனுடைய உள்ளத்தைக் கலைத்துவிட்டனர்.

மனந்திரிந்த அமணன் தன் முன்னவனோடு மாறு கொண்டான். அரசாட்சியைக் கைப்பற்றுதற்குத் தன் நண்பர்களுடன் சேர்ந்து பலவகைச் சூழ்ச்சிகளைப் புரிந்தான். இளவலின் போக்கைக் கண்ட குமணன் ஒரு நாளிரவு நாட்டைத் துறந்து காட்டை யடைந்தான். மறைந்து உறைந்தான். அமணன் அரசாட்சியைக் கைப்பற்றிக்கொண்டான். தன் முன்னவனைக் கொலை புரிதற்கும் எண்ணினான். 'தன் அண்ணன் தலையைக் கொண்டுவருபவர்கட்கு ஆயிரம் பொன் நன்கொடை வழங்கப்படும்' என்றும் பறையறைவித்தான்.

இங்நிலையிற் பெருந்தலைச்சாத்தனார் என்னும் புலவர் குமணன்மீது பாடல் செய்துகொண்டு பரிசில் பெறுவதற்காக வந்தார். அவர் வறுமையால் மிகவுந் துன்பமடைந்திருந்தார். அவர் குமணன் நாட்டைத் துறந்து காட்டை யடைந்துறைதலை யறிந்தார். காட்டை யடைந்து தன் பாட்டைப் படித்தார்.

குமணன் புலவருக்களிக்கப் பொருளில்லையே என்று வருந்தினான். தன் இளையோன் தன் தலைக்கு ஆயிரம் பொன் பரிசளிப்பதாகப் பறையறைந்திருப்பது அவனுடைய நினைவிற்கு வந்தது. தன் தலையைப் புலவருக்குக் கொடுக்க முடிவு செய்தான். இடையே யிருந்த உடைவாளை யெடுத்தான். புலவர் முன்பு நீட்டினான். தலையைக் கொய்து கொண்டுபோய்ப் பரிசிலைப் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டிக்கொண்டான். புலவர் பொய்த் தலை யொன்றைச் செய்துகொண்டு சென்றார். அமணன் மனந்திரிந்தது. புலவர் உடன்பிறந்தார் இருவரையும் ஒன்றுகூட்டிப் பண்டுபோல் வாழச் செய்தார். வறுமையடைந்து துன்பத்திலாழ்ந்துநின்ற குமணன் அந்த நிலைமையினுஞ் செந்தமிழ்வாணருக்குதவி செய்ய முந்திநின்ற நிலைமையை உலகம் இன்றும் மகிழ்ந்து போற்றுகின்றது.

ஒருபுடை பாம்பு கொளினும் ஒருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறூஉந்—திங்கள்போல்
செல்லாமை செவ்வனேர் நிற்பினும் ஒப்புரவிற்(கு)
ஒல்கார் குடிப்பிறந் தார்.

குடிப்பிறப்பு, செய். 8.

(இ - ள்.) ஒரு பக்கம் பாம்பாற் பற்றிக்கொள்ளப்பட்டாலும், ஒரு பக்கத்தால், அழகிய பெரிய உலகத்தை விளக்கமடையுமாறு செய்கின்ற திங்களைப்போல, நல்ல குடியிலே பிறந்தவர்கள், வறுமையானது மிகுதியாக அமைந்து நின்றபொழுதும், பிறருக்கு உதவி செய்வதற்குத் தளர்ச்சியடையமாட்டார்கள்.

உஉ. மாசு நீங்கிய மாணவன்

ஒரு பெருந் தமிழாசிரியரிடத்திலே பல மாணவர்கள் கல்வி கற்றுக்கொண்டிருந்தார்கள். ஆசிரியர் ஒவ்வொரு நாளும் சிறிதுநேரம் அம் மாணவர்கட்குத் தக்க அறவுரைகளைக் கூறுதல் வழக்கம். அவ்வாறு கூறும்போது எல்லா மாணவர்களும் ஆசிரியரைச் சூழ்ந்திருப்பார்கள். 'பிறர்மனை நயத்தல் கூடாது; புறங்கூறுதல் ஆகாது' என்பன முதலியவைகள் ஒழுகலாற்றுரையில் அடங்கியிருக்கும். அவ்வாறு அறநெறியுரைக்கும்போது ஒரே ஒரு மாணவன்மட்டும் மற்ற மாணவர்களோடிருக்கமாட்டான். அவன் வேறு ஏதாவது அலுவல் பார்த்துக்கொண்டிருப்பான்.

தமிழாசிரியரிடத்திற்கு ஓரன்பர் வழக்கமாக வந்து போய்க்கொண்டிருந்தார். அவர் ஒரு மாணவன்மட்டும் அறநெறி கூறுமிடத்திற்கு வராதிருத்தலையும் ஆசிரியரும் அவனை அழையாதிருத்தலையும் தினந்தோறும் பார்த்துக்கொண்டிருந்தார். அம்மாணவன் பிற மாணவர்களோடு சேர்ந்து ஏன் அறவுரைகளைக் கேட்பதில்லை. ஆசிரியரும் அம்மாணவனை ஏன் அழைப்பதில்லையென்று எண்ணமிட்டார். அவருக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆகவே, அவர் ஒரு நாள் தமிழாசிரியரைப் பார்த்து, 'அந்த ஒரு மாணவனை மட்டும் நீங்கள் ஏன் கூப்பிடுவதில்லை? அவனும் ஏன் வருவதில்லை?' என்று கேட்டார்.

அதற்குத் தமிழாசிரியர், 'அம் மாணவன் மற்றவர்களைப் போன்றவன் அல்லன். அவன் உள்ளத் தூய்மை பெற்றவனாக விளங்குகின்றான். புறங்கூறல் பிறர்மனை நயத்தல் முதலிய தீய குணங்கள் அவனிடஞ் சிறிதும் இல்லை. 'ஒருவர் பிறருடைய மறைபொருளைக் கேட்

பதின்கண் செவிடாகவும், பிறர் மனைவியைப் பார்ப்பதிற் குருடாகவும், காணுவிடத்திற் பழித்துரைப்பதில் ஊமையாகவும் இருப்பார்களானுல் அவர்கட்கு எத்தகைய அறமுமே கூறவேண்டியது இல்லை. ஆகையால்தான் திருந்திய உள்ளம் படைத்த அம்மாணவனை நான் அறங்கூறும் இடத்திற்கு அழைப்பது இல்லை' என்று கூறினர். ஐயப்பாட்டை வினவிய அன்பரும் உண்மையை யுணர்ந்து தெளிந்தார்.

பிறர்மறை யின்கட் செவிடாய்த் திறனறிந்
தேதிலா ரிற்கட் குருடனய்த் தீய
புறங்கூற்றின் மூங்கையாய் நிற்பானேல் யாதும்
அறங்கூற வேண்டா அவற்கு.

மேன்மக்கள், செய். 8.

(இ - ள்.) ஒருவன் பிறர் பேசும் மறைவுச் செய்திக்கண் காது கேளாதவனுகவும், நல்லொழுக்கத் திறனை நன்குணர்ந்து, பிறருடைய மனையாளைக் கண்டவிடத்துக் கண் தெரியாதவனுகவும், கொடிய பழிப்புச்சொல்லைப் பேசுவதிலே வாய் பேசமுடியாதவனுகவும், அமைந்திருப்பானுயின், அவனுக்கு எத்தகைய அறநெறியையுங் கூறவேண்டியதில்லை.

உ௫. அஞ்சிக்கிடந்த சயத்திரதன் அழிந்தொழிந்தது

சயத்திரதன் முதலிய பலர் ஒன்று சேர்ந்து அருச்சுனன் மகனுகிய அபிமன்னனை வஞ்சகமாகக் கொன்று தீர்த்துவிட்டார்கள். அதனுல் அருச்சுனனுக்குப் பெருஞ்சின முண்டாகிவிட்டது. மறுநாள் ஞாயிறு படுமுன் சயத்திரதனைக் கொன்றுவிடுவதாகச் சூளுரை புகன்ருன். அவ்வாறு கொன்று தொலைக்காவிடின் தான் இறந்து தொலைவதாகவும் உறுதியாக

வுரைத்தான். 'மறுநாள் ஒருநாள் மட்டும் சயத்திர தனைக் காப்பாற்றிவிட்டால் பிறகு வெற்றி நமக்கே யாகும்; அருச்சுனன் அழிந்தொழிவான்' என்று துரியோ தனனும் அவனுடைய நண்பர்களும் முடிவு செய்தனர். சயத்திரதனை நிலவறைக்குள் வைத்துப் போராண்மை யாளர்கள் பலர் பேராண்மையுடன் போற்றினர். ஆயி னும், சயத்திரதனுக்கு அச்சம் நீங்கவில்லை. அருச் சுனனும் கண்ணபிரானும் ஆற்றலிற் சிறந்தவர்க ளாயிற்றே; நம்முடைய உயிர்க்கு எந்த நேரத்தில் இறுதியேற்படுமோ என்று அஞ்சி நடுநடுங்கிக்கொண் டிருந்தான்.

அஞ்சிக்கிடக்கும் சயத்திரதனை அழித்தொழித்துக் கண்ணபிரான் அருச்சுனனைக் காப்பாற்றவேண்டு மென்று எண்ணினர். தமது ஆழிப்படையை விண் ணிற் செலுத்திக் கதிரவனை மறைத்தார். அனைவரும் பொழுது போய்விட்டதென்று எண்ணினர். அருச்சு னன் தீப்பாய்தலுக்கு ஏற்பாடாகியது. பாண்டவர் பக்கத்தினர் வருந்தினர். துரியோதனனைச் சேர்ந்தோர் மகிழ்ந்து இன்பக் கூத்தாடினர்; அருச்சுனன் தீப் பாய்தலைப் பார்த்துக் களிக்கும்படி அனைவரும் வந்த னர்; அக்கூட்டத்தில் சயத்திரதனும் இருந்தான். கண்ணபிரான் அருச்சுனனுக்குச் சயத்திரதனைச் சுட்டிக் காட்டினர். 'உன்னுடைய பகைவன் அதோ இருக் கின்றான். அவனை உடனே கொன்று வீழ்த்து' என்றார். அருச்சுனனும் அவ்வாறே கொன்று வீழ்த்தினான். பிறகு கண்ணபிரான் கதிரவனை மறைத்திருந்த தமது உருளைப் படையை மீட்டுவிட்டார். கதிரவன் ஒளிவிட்டு விளங்கி னான். துரியோதனன் பக்கத்தினர் சயத்திரதன் அழிந் தொழிந்தமைக்காகப் பெரிதும் வருந்தினர். பெருமை

மிக்கவர்களுடைய சினத்திற்கு ஆளானல் அருமை மிக்க அரணிற்புகுந்து பதுங்கினலுங்கூட அவர்கள் உய்யமாட்டார்கள் என்பதை உலகம் சயத்திரதனிடத்திலே உணர்ந்துகொண்டது.

விரிநிற நாகம் விடருள தேனும்
உருமின் கடுஞ்சினஞ் சேணின்று முட்கும்
அருமை யுடைய அரண்சேர்ந்தும் உய்யார்
பெருமை யுடையார் செறின்.

பெரியாரைப்பிழையாமை, செய். 4

(இ - ள்.) மிகுந்த நிறமுள்ள பாம்பானது, மலைப்பிளப்பில் இருந்தாலும், இடியின் கொடிய சினமானது, மிகத்தொலைவான விண்ணில் இருக்கும்போதும் அஞ்சும். அதைப்போலப் பெரியோர்கள் சினந்தால், மிகு பாதுகாப்பையுடைய கோட்டையிற் புகுந்திருந்தாலும் பிழைக்கமாட்டார்கள்.

உ௯. மனந்திரிந்த கைகேயி

கைகேசி என்பவள் தசரதமன்னனுடைய பெருந்தேவியர்களில் ஒருத்தி, தன் மகன் பரதனைவிட இராமபிரானிடத்திலே பன்மடங்கு மிகுதியான அன்புகொண்டவள். இராமனுங் கைகேயியிடத்திலே பேரன்புகொண்டிருந்தான். தன் தாய் கோசலையைவிடக் கைகேசியையே பெரிதும் மதித்திருந்தான். இராமனுக்கு முடிசூட்டுவதென்று தசரதமன்னன் முடிவு செய்தான். அம்முடிவினை யறிந்த அனைவரும் மகிழ்ந்தனர். கைகேசியும் உள்ளங் களித்திருந்தாள். கைகேசிக்குக் கூனியென்றொரு தோழியிருந்தாள். அவளுடைய உடல் கோணியிருந்ததல்லாமல் உள்ளமுங் கோணியிருந்தது. இராமனிடத்திலே அவள் பகைகொண்டிருந்தாள். இராமன் அரசாட்சியை யடையாமல் தடுத்துவிட வேண்டுமென்று முடிவுசெய்தாள்.

கைகேசியை யடைந்து அவளுடைய உள்ளத்தைக் கலைப்பதற்கு மெள்ள முயன்முள். கைகேசி கூனியின் மொழிகளை முதலில் ஒரு பொருட்படுத்தி உள்ளந் திரியவில்லை. கரைப்பார் கரைத்தால் கல்லுங்கரையு மல்லவா? கூனி பலப்படக் கூறியதைக் கேட்டுக் கைகேசியின் உள்ளந் திரிந்தது. அவள் தன் மகன் பரதனுக்கே முடிசூட்டுமாறுசெய்து இராமனைக் காட்டிற்கு அனுப்பிவிடவேண்டுமென்று முடிவுசெய்தாள்; அவ்வாறே தசரதமன்னனிடங் கூறி அதில் வெற்றியும் பெற்முள். இராமனைத் தானே யழைத்துக் காட்டுக்குச் செல்லுமாறு கட்டளையிட்டாள். இராமனும் அவ்வாறே சென்முன். இராமனிடத்திலே பேரன்பு கொண்டவளாக விளங்கியிருந்த கைகேசி இறுதியில் உள்ளந் திரிந்து இராமனுக்குக் கேடு சூழ்ந்ததைக் கண்ட மக்கள், 'கூனியின் கூட்டுறவால்தான் கைகேசி கொட்டொழிந்தாள்' என்று பலவாறு இகழ்ந்து மொழிந்தார்கள். தீயவர்களைச் சேர்ந்தால் மாசற்ற உள்ளம் படைத்தவர்களும் மாசுற்ற உள்ளமுடையவர்களாய்க் கொட்டொழிவார்கள் என்பதற்குக் கைகேயியே தகுந்த எடுத்துக்காட்டாக அமைந்தாள்.

மனத்தால் மறுவில ரேனுந்தாம் சேர்ந்த
இனத்தால் இகழப் படுவர்—புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
எறிபுனந் தீப்பட்டக் கால்.

நல்லினஞ்சேர்தல்; செய். 10.

(இ - ள்.) வெட்டப்பட்ட காடு; தீயிற்பட்டு எரியத் தொடங்கினால், காட்டிலுள்ள நன்மணம் வீசுகின்ற சந்தனமரமும், வேங்கை மரமும் வேகும்; அதைப்போல, மனத்தில் யாதொரு குற்றமும் அற்றவர்களாக விருப்பினும், தாங்கள் சேர்ந்துள்ள தீய கூட்டத்தின் கூட்டுறவால் நல்லவர்களும் இகழ்ச்சியை அடைவார்கள்.

உரு. நல்லினச்சேர்க்கை நன்மை பயக்கும்

நந்தர்கோன் என்பவன் இடைக்குலத்தினன். யமுனையாற்றின் கரையிலிருக்கும் கோகுலம் என்னும் ஊரிலிருந்தவன்; ஒரு சிற்றரசன்; நல்லியல்புகள் பலவும் புல்லப்பெற்றவன். வசுதேவருக்கு நண்பன். அவனுடைய இல்லாளின் பெயர் யசோதை. இந்த நந்தர் கோன் இனிமையுடன் வாழ்க்கையை நடத்திக்கொண் டிருந்தான். அந்நாளில் கண்ணன் பிறந்தான். கண்ண னால் தனக்கு இன்னல் நேரிடும் என்பதை யுணர்ந்த கஞ்சன் என்னும் வஞ்சன் கண்ணனைத் தொலைக்க எண்ணினன். கஞ்சன் நெஞ்சையறிந்த கண்ணன் பெற்றோர் அவ்வண்ணலை மறைமுகமாக நந்தர்கோன் பாற் சேர்த்தனர். நந்தர்கோன் கண்ணனைச் சிறப்புடன் வளர்த்தான். அறிஞர் பலரின் நட்பைப் பெற்றிருந்த நந்தர்கோன் கண்ணன் சேர்க்கையாலும் எண்ணருஞ் சிறப்படைந்தான்.

நந்தர்கோன் ஆண்டுதோறுந் தைத்திங்களில் ஒரு மலையின்கண் இந்திரவிழா நடத்துதல் வழக்கம். கண்ணன் அவ்வழக்கத்தைத் தடுத்தான். இந்திரவிழா நடைபெறவில்லை. அதனாற் சினமடைந்த இந்திரன் நந்தர்கோனது ஆக் கூட்டங்களின்மேல் கல்மழை பொழியச் செய்தான். கண்ணன் அதற்கு அஞ்சவில்லை. கோவர்த்தனம் என்னும் மலையைக் குடையாகத் தூக்கிப் பிடித்தான். ஆநிரைகளுக்கு அல்லல் யாதும் ஏற் படாதவாறு காத்தான். கண்ணன் வளர்ந்து நின்றபடி யால் நந்தர்கோன் பல சிறப்பினை யடைந்தான். பலரும் நந்தர்கோனைப் பெரிதும் பாராட்டிப் போற்றினர்கள். இடைக்குலத்தில் தோன்றிய நந்தர்கோன் எண்ணிலாச்

சிறப்புக்களை எய்துதற்குப் பெருமையிற் சிறந்த கண்ணன் கூட்டுறவே காரணமாக அமைந்துநின்றது. சிறப்பற்ற இழிந்தவர்களாயினும் உயர்ந்தவர்களுடைய கூட்டுறவைப் பெறின் மிகுந்த சிறப்பினை யடைவார்கள் என்பதை அனைவரும் நந்தர்கோன்பால் நன்கு கண்டு தெளிந்தனர்.

ஒண்கதிர் வாண்மதியம் சேர்தலால் ஓங்கிய
அங்கண் விசும்பின் முயலுந் தொழப்படூஉம்
குன்றிய சீர்மையர் ஆயினுஞ் சீர்பெறுவர்
குன்றன்னார் கேண்மை கொளின்.

நல்லினஞ்சேர்தல், செய். 6.

(இ - ள்.) விளக்கம் பொருந்திய ஒளியினையுடைய வெள்ளிய திங்களைச் சேர்ந்திருக்கின்றபடியினாலே, உயர்ந்த அழகிய இடத்தை யுடைய வானின்கண் உள்ள முயலும் எல்லோராலும் வணங்குதலைப் பெறும். குறைந்த சிறப்புடையவர்களேயானாலும், மலையைப்போல் மாண்பு பொருந்தியவர்களுடைய நட்பினைப் பெறுவார்களாயின், சிறப்பினை யடைவார்கள்.

உகூ. தருமருந் துரியோதனனும்

தருமர் பாண்டுவின் மகன். துரியோதனன் திருதராட்டிரன் மகன். இவர்கள் உடன்பிறப்பு முறையினர். ஆயினும், இருவருடைய குணநலங்கட்கும் மிகுந்த வேறுபாடுண்டு. தருமருடைய உள்ளம் தூய்மையுடையது. துரியோதனனுடைய உள்ளம் கள்ளங்கபடு முதலிய தீக்குணங்கள் நிறையப்பெற்றது. ஒருமுறை பீஷ்மர் துரோணர் முதலிய பெரியோர்கள் துரியோதனனையும் தருமரையுந் தனித்தனியே அழைத்தனர். துரியோதனனைப் பார்த்து, 'நீ இந்த அத்தினபுரம் முழுதும் நன்கு தேடி நல்லவனாக ஒருவனைப்

பார்த்து அழைத்து வா. அவனைப் போற்றிச் சிறப்புச் செய்தல்வேண்டும்' என்றனர். பிறகு தருமரைப் பார்த்து, 'நீ இந்த அத்தினபுரம் முழுதும் நன்கு தேடி ஒரு பொல்லாதவனை அழைத்துக்கொண்டு வா. அத் தீயவனை நன்கு ஒறுத்தல் வேண்டும்' என்றனர். அவர்கள் கூறியவாறே துரியோதனனும் தருமரும் நல்லவனையும் பொல்லாதவனையுந் தனித்தனியே தேடிச் சென்றனர். இருவரும் மாலையில் திரும்பி வந்தனர். துரியோதனன் நல்லவர்கள் ஒருவரும் அத்தினபுரியில் அகப்படவில்லை என்றான். தருமர் பொல்லாதவர்கள் எவரும் அத்தினபுரியில் கிடைக்கவில்லை என்றார். துரியோதனன் தீயவுள்ளத்தோடு எல்லோரையும் பார்த்தபடியால் அனைவரும் தீயவர்களாகவே காணப் பட்டனர். தருமரோ தமது நல்ல உள்ளங்கொண்டு நோக்கியபடியால் அவருக்கு யாருமே தீயவர்களாகத் தெரியவில்லை. இருவருடைய மனப்பண்பையும் பெரி யோர்கள் பார்த்து இவர்களுடைய பிற்கால வாழ்வும் இவர்களுடைய மனப்போக்கை ஒட்டித்தான் இருக்கு மென்று முடிவு செய்தனர்.

துரியோதனன் தன் மனப் போக்கின்படியே சென்று மிகப் பொல்லாதவனானான். பாண்டவர்களைப் பன்முறை கொலைபுரிய முயன்றான். துரோபதையை மன்னர்கள் கூடிய அவையில் துகிலுரியச் செய்தான். கண்ணபிரானைப் படுகுழியில் வீழ்த்திக் கொலைபுரியச் சூழ்ச்சி செய்தான். துரியோதனனுடைய இந்தத் தீமைகள் உலகத்தாருக்குப் பெரிதாகத் தெரியவில்லை. தருமர் கண்ணபிரான் கட்டளைப்படி இறந்துபோன ஒரு யானையின் செய்தியைத் துரோணருடைய காதுகளிற் கேட்குமாறு சொல்லியதுதான் உலகத்தாருக்குப்

பெரிய தீமையாகப் போய்விட்டது. 'தருமரும் பொய் கூறினர்' என்று அவர்மீது பழிச்சுமையை ஏற்றி விட்டார்கள். இதனால் சிறியார்கள் செய்கின்ற பெரிய தீமைகள் கூட உலகத்தாருக்கு ஒரு பொருளாகத் தோன்றாதென்பதும், பெரியார்களுடைய தீமைகள் தாம் ஓர் அணுவளவாக விருப்பினும் மலையளவாகத் தெரிந்து, அப்பெரியார்களை இகழத் தொடங்குவார்கள் என்பதும் நன்கு தெரியலாயிற்று.

பெருவரை நாட பெரியார்கண் தீமை
கருநரைமேல் சூடேபோல் தோன்றும்--கருநரையைக்
கொன்றன்ன இன்னா செயினுஞ் சிறியார்மேல்
ஒன்றானுந் தோன்றாக் கெடும்.

பெருமை, செய். 1.

(இ - ள்.) பெரியமலையையும் நாட்டையுமுடைய பாண்டியனே, பெரியோர்களிடத்திலே உண்டாகிய குற்றம், வெள்ளை எருதின்மேல் இட்ட சூட்டின் தழும்புபோல் வெளிக்குக் காணப்படும். பெரிய காளையைக் கொன்றாற் போன்ற குற்றங்களைச் செய்தாலும், சிறியவரிடத்து ஒரு குற்றமாவது வெளியே தெரியாமற் கெட்டுப் போகும்.

௨௭. பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும்

உலகத்தின்கண்ணே ஆயிரக்கணக்கான குல வேறுபாடுகள் கற்பிக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு குலத்தினரும் தம்மை உயர்ந்தவர்களென்றும் மற்றவர்களைத் தாழ்ந்தவர்களென்றுங் கூறுகின்றனர். புலால் தின்னும் புல்லர்கள் கூடப் புலாலையுண்ணாதவர்களைக் காட்டிலுந் தம்மை உயர்ந்தவர்களென்று கூறிப் பறை யறைகின்றனர். ஔவையார் குலத்தை இரண்டாக

வகுத்தார். 'இட்டார் பெரியார் இடாதார் இழிகுலத்தார்' என்று கூறினர். திருவள்ளுவர் எல்லா வுயிர்கட்கும் பிறப்பு ஒரே தன்மையாகலின் பிறப்பினுல் வேறுபாடு இல்லை யெனவும், அவர்கள் செய்கின்ற செயல்களைக் கொண்டுதான் உயர்வையுந் தாழ்வையும் முடிவுகட்ட வேண்டுமென்றும் முடிவு கட்டினர். தற்கால வுலகம் பொருள் மிகுதியாகப் படைத்தவர்களை உயர்ந்த குலமாகவும் வறுமைமிக்கவர்களைத் தாழ்ந்த குலமாகவும் முடிவுகட்டி யிருக்கின்றது. பொருள் ஒன்றைக்கொண்டு மட்டுமல்லாமல், தவம் கல்வி முயற்சி முதலியவைகளைக்கொண்டும் குலப் பாகுபாட்டை முடிவு செய்யவேண்டுமென்பது சமணமுனிவர்களுடைய முடிவு.

பிறப்பினுல் உயர்ந்தவர்களாகத் தம்மை உயர்த்திச் சொல்லிக் கொள்ளுகிறவர்கள் மிகவும் இழிந்த செயல்களைச் செய்பவர்களாகவும் இருக்கிருர்கள். ஆகவே, பிறப்பு ஒன்றைக் கொண்டுமட்டும் குலத்தை முடிவுகட்டி விடுதல் கூடாது. காந்தியடிகள் முதலாயினேர் 'தாழ்த்தப்பட்ட மக்கள் தாழ்வுபடுத்தப்படுதற்குரியவர்களாக மாட்டார்கள்' என்று அவர்களை உயர்த்துதற்கு மிகவும் முயன்றனர். அவர்கள் முயற்சியால் தற்கால வுலகில் குலவேற்றுமை ஓரளவு மறைந்திருக்கின்றது. தாழ்ந்த குலத்தினர் என்று இழிக்கப்பட்ட பலர் கல்வியறிவாலும் செயலாலும் ஆள்வினையாலும் உயர்ந்த குலத்தினரைவிடச் சிறந்த நிலையில் இன்று விளங்கியிருக்கின்றனர். இதனுல் நல்ல குலம் என்றும், தீய குலம் என்றும் சொல்லப்பெறுகிற சொல் இன்று சொல்லளவில்தான் இருக்கின்றது.

நல்ல குலமென்றுந் தீய குலமென்றும்
சொல்லள வல்லாற் பொருளில்லை—தொல்சிறப்பின்
ஒண்பொரு ளொன்றோ தவங்கல்வி யாள்வினை
என்றிவற்று ளாகுங் குலம்.

நாளாண்மை, செய். 5.

(இ - ள்.) உயர்ந்த குலம் என்றும், தாழ்ந்த குலம் என்றும் சொல்லும் அளவேயல்லாமல் அச்சொல்லில் யாதொரு பொருளும் இல்லை; பழைய சிறப்பினையுடைய, ஒள்ளிய பொருள் ஒன்றினால் அல்லாமல், தவமும் கல்வியும் முயற்சியும் என்று சொல்லப் பெறுகிற இவைகளால் குலமானது முடிவு செய்யப்பெறும்.

உஅ. வற்கடத்தில் உதவிய வள்ளல்

ஒரு காலத்தில் தொண்டை நாட்டில் ஒரு செல்வன் இருந்தான். சில ஆண்டுகள் தொடர்ந்து நாடெங்கும் மழையில்லாமற் போய்விட்டது. செல்வனுடைய பெயர் பிச்சையப்பன். அவன் அருள்மிகுந்த உள்ளம் அமையப்பெற்றவன். வறிஞராயினோர் 'பிச்சையப்பனை யடைந்தால் பேணுவான்' என்று அவனை யடைந்தனர். தன்னை யடைந்தவர்களனைவரையும் பிச்சையப்பன் நச்சிய உள்ளத்துடன் புரந்ததால் அவனிடமிருந்த உணவுப் பொருள்கள் விரைவில் தீர்ந்தன. வறிஞர் கூட்டமோ நாளும் நாளும் மிகுதிப்பட்டுக்கொண்டே வந்தது. பிச்சையப்பன் தன்னுடைய நிலத்திலே மிக ஆழமான கிணறுகள் வெட்டி அதிலிருந்து தண்ணீர் இறைத்து மிகத் துன்பப்பட்டு உணவுப் பொருள்களை உண்டாக்கினான். வந்தடைந்த வறிஞர்களை உரிமையுடன் அருமையாகப் பேணினான். புல்லறிவாளர் சிலர் பிச்சையப்பனைக் கண்டு, 'நீ வீணாக வருந்தி உணவுப் பொருள்களை யுண்டாக்கி ஏன் தொல்லைப்படுகின்றாய்?

உன்னுடைய பாட்டைப் பார்த்துக்கொண்டு பேசாம லிருந்தால் தொல்லையில்லாமல் சும்மா இருக்கலாமே' என்று கூறினர். நல்லறிவற்ற புல்லறிவாளரின் உரையைக் கேட்ட பிச்சையப்பன் 'சும்மா இருந்தால் நமக்கு ஏற்படக்கூடிய நன்மை என்ன? எத்தனையோ வறிஞர்கள் உண்டு பசிதீர்தல் ஒப்புயர்வற்ற நல்வினையாயிற்றே. நீங்கள் இத்தகைய வீணுரைகளை இனி மேல் பேசாதீர்கள்' என்று கூறிவிட்டான். மேலும் பலவாறு முயன்று பலரைக் காப்பாற்றினுன். தான் வருந்தியேனும் தன்னை யடைந்தவர்களைக் காப்பாற்றுதல்தான் சிறந்தவர்களின் செயல் என்பதை இவன் உலகிற் குணர்த்தி நின்ருன்.

அழல்மண்டு போழ்தின் அடைந்தவர்கட் கெல்லாம்
நிழல்மரம்போல் நேரொப்பத் தாங்கிப்-பழுமரம்போல்
பல்லார் பயன்துய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன்.

சுற்றந்தழால், செய். 2.

(இ - ள்.) கதிரவனுடைய வெம்மை மிகுந்த சமயத்தில், தன்னைச் சேர்ந்தோரனைவருக்கும், நிழலைக் கொடுக்கின்ற மரத்தைப் போல, ஒருபடியாகத் தாங்கி, பழுத்த மரம் போல, பலபேரும் பயனை நுகர, தான் துன்பத்தினை யடைந்து வாழ்தலே, நல்ல ஆண் மகனுக்குக் கடமையாகும்.

உக இராமரும் விபீடணனும்

இராமர் சுக்கிரீவன் அநுமான் முதலியவர்களோடு இராவணனைக் கொன்று சீதையைச் சிறை நீக்குமாறு இலங்கைக்குச் சென்றார். போர் தொடங்குவதற்கு ஏற்பாடுகள் நடந்தன. விபீடணன் இராவணனுடைய தம்பி. அரக்கர் குலத்தில் தோன்றியவனாக இருந்த போதிலும் திருந்திய பண்பும் சிறந்த கொள்கையும் அமைந்தவனாக விருந்தான். அவன் தன் முன்னோனாகிய இராவணனிடம் அறவுரைகள் பல கூறினான். இராம பிரானிடஞ் சீதையைச் சேர்த்துவிட்டு இராமபிரானைப் பணிந்து உய்ந்து போதலே உயர்ந்ததென்று உரைத் தான். இராவணன் விபீடணனுடைய உரைகளைக் காதிற் போட்டுக்கொள்ளவில்லை. 'நீ அந்த இராம னுடன்தானே சென்று சேர்ந்துகொள்' என்று கூறி விரட்டிவிட்டான். விபீடணன் தன் துணைவர்கள் சில ருடன் இராமபிரானை யடைந்தான். படையில் நடுவில் விபீடணன் தன் துணைவர்களோடு சேர்ந்தான். விபீடணனையும் அவன் துணைவர்களையும் கண்ட குரங்கு வீரர்கள் ஆரவாரஞ் செய்தனர். 'அவுணர்கள் நம் படைக்குள்ளே வந்து விட்டார்கள்! அடியுங்கள்; பிடியுங்கள்; கடியுங்கள்; உதையுங்கள்' என்று கூறி அவர்களைச் சூழ்ந்துகொண்டார்கள். விபீடணன் 'இராமபிரானுக்கு அடைக்கலம்' என்று கூறி ஓலமிட் டான். இராமபிரான் விபீடணனுடைய கூச்சலைக் கேட்டுத் தம்மிடம் அழைக்குமாறு கட்டளையிட்டார். விபீடணனும் தன் துணைவர்களுடன் சென்று இராம பிரானைப் பணிந்தான். இராமபிரான் விபீடணனைப் பார்த்து, 'நீ யாவன்? இங்கே ஏன் வந்தாய்?' என்று உசாவினார். விபீடணன் தன்னை விளக்கிக் கூறிய

துடன் தான் தன் முன்னேனை நீங்கி இராமபிரானிடம் அடைக்கலமாக வந்திருப்பதாகவும் தன்னை ஏற்றுக் கொண்டு காப்பாற்ற வேண்டுமென்றும் வேண்டிக் கொண்டான். விபீடணன் தன் பகைவனுகிய இராவண னுடைய தம்பியாக இருந்தும் அவனைச் சேர்த்துக் கொள்ளுதற்கு விரும்பினுர். தம் துணைவர்களைக் கலந்து ஆராய்ந்தார். விபீடணனைத் தம்மிடமே யிருத்திக்கொண்டு வேண்டிய நன்மைகளையுஞ் செய் தார். தம்மைச் சேர்ந்தவர்கள் யாராக இருந்தபோதி னும் பெரியோர்கள் அவர்களைத் தாங்கிப் புரப்பார்கள் என்பதை உலகம் இராமபிரானிடம் கண்டு மகிழ்ந்தது.

அடுக்கல் மலைநாட தற்சேர்ந்த வரை
எடுக்கல மென்னுர் பெரியோர்—அடுத்தடுத்து
வன்காய் பலபல காய்ப்பினும் இல்லையே
தன்காய் பொறுக்கலாக் கொம்பு.

சுற்றநீழநால், செய். 3.

(இ - ள்.) அடுக்கடுக்காக அமைந்த மலைநாட்டையுடைய பாண்டியனே, பெரியோர்களானவர்கள், தம்மை யடைந்தவர்களைத் தாங்கமாட்டோமென்று சொல்லமாட்டார்கள்; மேலும் மேலும் வலிய காய்களைப் பற்பலவாகக் காய்த்தாலும், தன் காயைத் தாங்காத மரக்கிளையானது இவ்வுலகில் இல்லை.

௩௦. அரசனுற் கொலையுண்ட அம்பிகாபதி

அம்பிகாபதி என்பவன் கம்பருடைய அருமைத் திருமகன். தந்தையைப்போலக் கல்வியறிவிற் சிறந்த வன். கம்பரிடத்திலே சோழமன்னன் மிகுந்த உரிமை யும் அன்பும் பாராட்டியிருந்தான். அதனுல் கம்ப ருடைய மகன் அம்பிகாபதியும் சோழமன்னனுடைய அரண்மனையிலே மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தான். அரசர்கள் யானையைப் போன்றவர்கள். உணவு

கொடுக்கும் பாகனையே யானை சமயத்தில் மிதித்துக் கொன்றுவிடும். அதைப்போல அரசர்களும் தமக்கு நன்மையை எப்பொழுதுஞ் செய்பவர்களுக்குக்கூடச் சினம் வந்தபோது தீமையைச் செய்துவிடுவார்கள் என்பதை அம்பிகாபதி பொருட்படுத்தவில்லை. ஒரு முறை அரசனுக்குப் பெரிய குற்றம் ஒன்றைச் செய்து விட்டான். அந்தக் குற்றமும் பெரியதுதான். அரசன் அந்தக் குற்றத்தைக் குறித்துப் பலவாறு ஆராய்ச்சி செய்தான். குற்றம் உண்மையில் நிகழ்ந்ததே என்று ஐயமற அறிந்தான்.

அரசர்களுக்கு, நண்பர்களோ வேண்டியவர்களோ மற்றும் அன்புபாராட்டக்கூடியவர்களோ இல்லை. அவர்கள் தங்கள் உள்ளத்தில் நினைத்ததை முடித்துத் தான் தீருவார்கள். அம்பிகாபதியினிடத்திலே குற்றத் தைக் கண்ட அரசன் அவன் புலவர் பெருமானாகிய கம்ப ருடைய மகனாயிற்றே என்றும் எண்ணிப் பார்க்கவில்லை. கொலைசெய்துவிடுமாறு ஏற்பாடு செய்துவிட்டான். அம்பிகாபதியை மீட்பதற்குக் கம்பர் மிகவும் முயன்றார். எவ்வளவோ முயன்றும் அம்பிகாபதியைக் காப்பாற்ற முடியவில்லை. அம்பிகாபதி கொலை செய்யப்பட்டான்.

தன் மகன் கொலை செய்யப்பட்டதைக் கண்ட கம்பருக்கு உள்ளம் உடைந்துபோயிற்று. அதனால் அவர் அரசனுடைய தொடர்பை நீக்கித் தனித்திருந் தார். ஆனால், அரசனுக்கும் கம்பருக்கும் மீண்டும் வம்புண்டாயிற்று. அரசன் கம்பர்மீது அம்பு ஒன்றை ஏவிக் கொலை செய்தான்.

அரசர்கள் மிகவும் பொல்லாதவர்கள்: யானையைப் போன்றவர்கள். தமக்கு நன்மை செய்பவர்களையும் கொலை செய்யக்கூடியவர்கள். அவர்களுடைய நட்பு

மிகவும் அஞ்சத்தக்கது என்பதைச் சோழ மன்னன் கம்பரைக் கொன்றதிலிருந்து மக்கள் உணர்ந்து கொண்டார்கள்.

யானை யனைவர் நண்போரீஇ நாயனையார்
கேண்மை தழீஇக் கோளல்வேண்டும்—யானை
அறிந்தறிந்தும் பாகனையே கோல்லும் எறிந்தவேல்
மெய்யதா வால்குழைக்கும் நாய்.

நட்பாராய்தல், செய். 3.

(இ - ள்.) யானையை ஒப்பானவர் நட்பை நீக்கிவிட்டு, நன்றி யறிதலுள்ள நாயை ஒப்பானவருடைய நட்பைத் தழுவிக்கொள்ளுதல் வேண்டும். யானை தனக்கு இரை தருவோன் என்பதை நன்கு உணர்ந் திருந்தும் பாகனைக் கொன்றுவிடும். நாயானது தன் தலைவன் தன் மீதெறிந்த வேல் தன் உடலின்கண்ணிருக்கவும் வருத்தத்தினைப் பாராட்டாது வாலினை யாட்டும்.

௩௧. பயனற்ற நண்பர்கள்

பல்கலைக் கழகம் ஒன்றிலே ஒரு மாணவன் கல்வி பயின்றுகொண்டிருந்தான். அவன் மிகவும் எளிய குடும்பத்தில் தோன்றியவன். ஆனால் நுண்மாணுழை புலமுடையவன். பலருடைய உதவியைப் பெற்றுக் கல்வியைக் கற்றுக்கொண்டிருந்தான். அவன் ஊக்கத் துடன் பயின்று மேல்வகுப்புக்களுக்குச் சென்றபொழுது அவனுக்குச் செலவு மிகுதியாயிற்று. நூல்கள் வாங்கு வதற்கும் உணவு முதலியவற்றிற்கும் மிகவும் தொல்லைப் பட்டான். அம்மாணவனைச் சூழ்ந்து அவனுடைய நண்பர்கள் மிகுதியாக விருந்தனர். அவர்கள் செல்வக் குடும்பத்திலே பிறந்தவர்கள். அவர்களுக்கு வேண்டிய அளவிற்கு மேலாகவே பொருள்கள் திங்கள்தோறும் அவர்களுடைய பெற்றோர்களிடமிருந்து வந்துகொண்

டிருந்தன. அவர்கள் வீண் செலவு செய்து ஆட்டம் போட்டுக்கொண்டிருந்தார்கள். அவர்கள் அனைவரும் வறுமையில் தொல்லைப்பட்டுக்கொண்டிருந்த எளிய மாணவனுக்கு ஆருயிர் நண்பர்கள்தாம். வேண்டுமானல் உயிரையும் கொடுத்து விடுவார்கள். ஆனல் பொருளைத்தான் கொடுக்கமாட்டார்கள்.

எளிய மாணவன் அந்தப் பயனற்ற நண்பர்களுடைய குணத்தை நன்குணர்ந்தவனுகையால் அவர்களிடமிருந்து உதவியை எதிர்பார்க்கவும் இல்லை. அவன் விடுமுறைக் காலங்களில் புறப்பட்டு மிகத் தொலைவிலுள்ள சில செல்வர்களிடம் சென்று தான் கல்வி கற்கும் நிலையைக் கூறி அவர்களிடமிருந்து உதவி பெற்றுக்கொண்டு வந்தான்.

ஒருமுறை ஒருவர் எளிய மாணவனைப் பார்த்து, 'உன்னைச் சுற்றிச் செல்வ நலத்திற் சிறந்த மாணவர்கள் பலர் நன்னிலையில் இருக்கின்றனர்களே அவர்களிடத்தில் சிறிது உதவியைப் பெற்றல் உன்னுடைய செலவுகட்குப் போதுமே! ஏன் அவ்வாறு பெற்றுக்கொள்ளக் கூடாது?' என்று கேட்டார்.

அதற்கு மாணவன், 'நான் பெற்றுக்கொள்ள மாட்டேன் என்ரு சொல்லுகிறேன்? அந்த மாணவர்கள் மிகுந்த பிசினிக் குணம் படைத்தவர்கள். அவர்கள் எனக்கு மிகவும் அண்மையில் இருக்கும் நண்பர்களாயினும் அவர்களுடைய நட்பினல் யாது பயன்? அவர்கள் வாய்ப்பேச்சளவில்தான் உதவி செய்வார்கள். ஆகையால் தான் நான் தொலைவில் சென்று மாண்புமிக்க வள்ளல்களிடம் உதவி பெற்றுக்கொண்டு வருகிறேன்' என்று கூறினன்.

நாய்க்கால் சிறுவிரல்போல் நன்கணிய ராயினும்
ஈக்கால் துணையும் உதவாதார்—நட்பென்னும்
சேய்த்தானும் சென்று கொளல்வேண்டும் செய்விளைக்
வாய்க்கால் அனையார் தொடர்பு. [கும்

நட்பாராய்தல். செய். 8.

(இ - ள்.) நாய்க்காலில் நெருங்கியுள்ள சிறுவிரல்களைப்போல மிகவும் நெருக்கமுடையவர்களாக விருந்தாலும் ஈயினது காலளவாயினும் உதவி செய்யாதவர்களது நட்பினால் என்ன பயனுண்டாகும்? வயல் விளையுமாறு செய்கின்ற வாய்க்காலைப்போன்ற நல்லவர்களது தொடர்பினைத் தொலைவிற் சென்றாயினும் அடைதல் வேண்டும்.

௩௨. இரண்டு நண்பர்கள்

மறைக்காடு என்னும் ஊரிலே அருளப்பன் என்பவனும் இருளப்பன் என்பவனும் நண்புடையவர்களாக விருந்தனர். அவர்கள் பல ஆண்டுகள் நெருங்கிய நண்பர்களாக இருந்தார்கள். அருளப்பன் வழக்கம்போல் இருளப்பனிடத்தில் அன்பும் பண்பும் உடையவனாக விருந்தான். ஆனால், இருளப்பனிடத்திலோ சிறிது மாறுபாடு காணப்பட்டது. அவன் அருளப்பனுக்குப் பல தொல்லைகளை அடிக்கடி செய்துகொண்டிருந்தான். ஆனால், ஒன்றும் தெரியாதவன்போல் நடந்து கொண்டான். ஆனால், அருளப்பனோ இருளப்பனுடைய தொல்லைகளை ஒரு பொருட்படுத்தவில்லை. அடிக்கடி இவ்வாறு நிகழ்ந்துகொண்டிருந்தது. நாளடைவில் இருளப்பன் அருளப்பனுக்குச் செய்யுந் தொல்லைகள் மிகுதிப்பட்டன.

ஒருநாள் அருளப்பன் இருளப்பனைப் பார்த்து, 'நண்பா! நீ எனக்கு அடிக்கடி பல தொல்லைகளைச் செய்து வருகிறாய். ஆனால், நான் அவைகளைச் சிறிதும்

பொருட்படுத்தப் போகிறதில்லை. நீ எனக்கு எவ்வளவோ நன்மைகளை முன்பு செய்திருக்கிறாய். நான் அவைகளையெல்லாம் மறந்துவிடுவேனோ? நானும் பதிலுக்குப் பதில் உனக்கு ஏதேனுந் தொல்லைகளைச் செய்தால் நம்மிருவருடைய நட்புக்கும் முடிவேற்பட்டு விடும். ஆனால், நான் சிறிது பொறுமையாக விருந்தாலோ நம்மிருவருடைய நட்புங் கெடாமல் வளர்ந்து கொண்டிருக்கும். ஆகையால், நான் நீ செய்கிற தொல்லைகளுக்காக உன்மீது வெறுப்படையப் போகிற தில்லை. நீ எவ்வளவு தொல்லைகளை வேண்டுமானாலும் செய்துகொண்டிரு. நீ எனக்குத் தொல்லைகளைச் செய்வதற்கு உனக்கு உரிமையுண்டு' என்று கூறினான்.

அருளப்பன் கூறியவைகளைக் கேட்ட இருளப்பன் மிகுந்த நாணமடைந்தான். நாம் நல்ல நண்பனுக்கு அல்லல் ஏற்படுமாறு நடந்துகொண்டோமே. நண்பனுடைய குணம் மிகவுஞ் சிறந்ததாகவன்றோ இருக்கின்றது. நமக்கு இந்தத் தீய அறிவு ஏன் உண்டாயிற்று?' என்று எண்ணி வருந்தினான். அவன் அருளப்பனைப் பார்த்து, 'நண்பா! நான் அறிவின்மையினால் உன்னிடந் தாறுமாறாக நடந்துகொண்டேன். நீயோ அவைகளையெல்லாம் பொறுத்து உன்னுடைய உயர்ந்த பண்பை நன்கு புலப்படுத்திவிட்டாய். இனிமேல் நமது நட்பு என்றுங் கெடாது' என்று கூறினான். அவர்களிருவரும் வழக்கம்போற் சிறந்த நண்பர்களாக விளங்கியிருந்தனர்.

இறப்பவே தீய செயினும்தன் நட்டார்
பொறுத்தல் தகுவதொன் றன்றோ—நிறக்கோங்(கு)
உருவவண் டார்க்கும் உயர்வரை நாட
ஒருவர் பொறைஇருவர் நட்பு.

நட்பிற் பிழைபொறுத்தல், செய். 3.

(ஒ - ள்.) அழகிய கோங்க மலரில் அழகிய வண்டினங்கள் ஒலிக்கும் உயர்ந்த மலைநாட்டையுடைய பாண்டியனே! தன் நண்பர்கள் மிகுதியாகவே தீமைகளைச் செய்தாலும் பொறுத்துக்கொள்வது தகுதியான ஒரு செயலன்றோ? ஒருவருடைய பொறுமையானது இருவருடைய நட்புக்கு ஏதுவாகும்.

௩௩. காடவர்கோன் கண்ட இன்பம்

I

ஐயடிகள் காடவர்கோன் என்பவர் அறுபான்மும்மைத் திருத்தொண்டர்களிலே ஒருவர். காஞ்சிமா நகரில் பல்லவர் குலத்தில் தோன்றிய ஒரு சிற்றரசர். நல்வினைப்பயனால் அவருடைய உள்ளம் நல் வழியிலே படர்ந்தது. நுண்ணிய அறிவு மிக்க புலவர்களுடன் பொருந்தி நூலாராய்தலைப் பேரின்பமாகக் கண்டு அவ்வின்ப நுகர்விலேயே காலங்கடத்திநின்றார். அறிவாளருடன் அளவளாவி இன்பநுகர்தலைப் பேரின்பமாகக் கொண்ட அவர், அமைச்சர் படைத் தலைவர் முதலியோருடன் பொருந்தி அரசாட்சிபுரிதலைப் பெருந் துன்பமாகக்கொண்டார். நாளடைவில் அரசியற் குழுவையும் அரசியலையும் அடியோடு வெறுத்தார். அரசியல் துறவை மேற்கொண்டார். இறைவன் எழுந்தருளியுள்ள பல சிவப்பதிகட்குஞ்சென்று இறைவனைப் புகழ்ந்து பாடுதலையே உயர்ந்த பணியாகக் கொண்டார்.

நுண்ணுணர்வாளரொடு பழகுதல் தேவருலக இன்பத்தினைப் போன்றதென்பதையும், பயனற்ற மற்றையோருடன் பழகுதல் நிரயத் துன்பத்தினைப் போன்றதென்பதனையும் உலகம் இப்பெரியார்பாற் கண்டுணர்ந்தது.

II

ஒரு செல்வனுக்குப் பல நண்பர்கள் இருந்தார்கள் அவர்களிற் சிலர் நல்ல அறிவினையுடையவர்கள். சிலர் அறிவு சிறிதும் அற்ற அறிவிலிகள். செல்வன் அறிஞர்களுடன் பழகும்போதெல்லாம் நூலின்கண் கூறப்பெறும் நல்ல செய்திகளைக்கேட்டு மிகுந்தமகிழ்ச்சியடைந்தான். அறிவற்ற கீழ் மக்களுடன் பழகும்போதெல்லாம் அவர்கள் கூறும் தீய வுரைகளைக் கேட்டு வருந்தினான். இந்தச் சிறியார்களிடம் நாம் அறிவில்லாமல் நட்புக்கொண்டமையால் இப்பொழுது இவர்கள் கூறும் தீய வுரைகளைக் கேட்டு வருந்தவேண்டியதாக விருக்கிறதே, யாது செய்வதென்று எண்ணமிட்டான். அறிவிலிகளின் கூடாநட்பை அடியோடு விட்டொழித்தலே அவர்களால் உண்டாகின்ற சிறு மொழிகளினின்றும் நீங்கி இன்புறுதற்குத் தக்க வழியென்று உறுதி செய்தான். அவ்வுறுதிப்படியே அறிவிலிகள் நட்பை யொழித்து அறிஞர் நட்பைமட்டும் கொண்டு மகிழ்ச்சியடைந்தான்

நுண்ணுணர்வி னாரோடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே யொக்கும் விழைவிற்றால்—நுண்ணூல்
உணர்விலர் ஆகிய ஊதியம் இல்லார்ப்
புணர்தல் நிரயத்தில் ஒன்று.

—கூடாநட்பு, செய். 3.

(இ - ள்.) நுண்ணிய அறிவுள்ளவர்களுடன் சேர்ந்து அனுபவிக்கும் இன்பம், தேவருலக இன்பத்தையே போன்ற விருப்பத்தினை யுண்டு செய்வதாகும். நுண்ணிய நூலை, கற்றுணராதவர்களாகிய பயனற்றவர்களைச் சேர்ந்திருத்தல், ஓர் அளற்றினில் விழுந்து வருந்துவதைப் போன்றதாம்.

௩௪. முருகக்கடவுளும் இராமபிரானும்

I

கந்தபுராணப் போரில் சூரபன்மன் முதன்முறை முருகக்கடவுளை யெதிர்த்துப் போர் செய்தான். இறுதியில் தோற்றுப்போனான். போர் செய்ய முடியாமல் தளர்ந்துநின்ற சூரபன்மனை முருகக்கடவுள் கொன்று விடுவதென்றால் எளிதாகக் கொன்றுவிடலாம். ஆனால், அவ்வாறு கொல்லவில்லை. 'நீ இப்பொழுது போரை நிறுத்திக்கொண்டு திரும்பிச்செல். பிறகு படைகளுடன் போருக்கு வா' என்று கூறி அனுப்பினார். மதங்கொண்டு எதிர்த்துப் போராடிய தன்னிடத்தில் முருகக் கடவுள் அருள்கொண்டு அவ்வாறு கூறியது சூரபன்மனுக்கு வியப்பையும் நாணத்தையும் விளைத்தது. அவன் திரும்பிச் சென்றான். ஆனால், அடங்கிக் கிடவாமல் மீண்டும் போருக்கு வந்து அழிந்தான். தோற்று நின்ற சூரபன்மனைக் கொல்லாமல் அன்று முருகக் கடவுள் அருள் செய்தனுப்பியதைக் கண்டு அனைவரும் பகைவர் தளர்ந்து நிற்கின்றபொழுது அறிவாளர்கள் அவர்களை எதிர்க்கமாட்டார்களென்பதை யுணர்ந்து கொண்டார்கள்.

II

இராமாயணப்போர் நிகழ்ந்தபொழுது முதனாட் போரில் இராவணன் தோற்றுத் தனித்தவனாக நின்றான். அவனைக் கொல்வது இராமபிரானுக்கு மிக எளிதாக இருந்துங் கொல்லவில்லை 'நீ இன்றைக்குத் திரும்பிச் செல்; இன்னும் எஞ்சியுள்ள படைகளைத் திரட்டிக் கொண்டு நாளைக்கு வா' என்று கூறி அருளுடன் அனுப்பிவைத்தார். இராவணனும் அன்று திரும்பிச் சென்று மற்றொருநாள் வந்து மாண்டான். பகைவர்

பணிவிடத்திற் பெரியோர்கள் எதிர்க்கமாட்டார்க ளென்பது இராமபிரானிடத்தினும் இனிது விளங்கியது.

பகைவர் பணிவிட நோக்கித் தகவுடையார்
தாமேயு நாணித் தலைச்செல்லார் காணாய்
இளம்பிறை யாயக்கால் திங்களைச் சேரா(து)
அணங்கருந் துப்பின் அரா.

—அறிவுடைமை, செய் 1.

(இ - ள்.) வருத்தஞ் செய்யும் அரிய வலியினையுடைய பாம்பானது, திங்கள் இளம்பிறையாக இருக்கும்போது அதனை வருத்துதற்குச் சேரமாட்டாது. அதைப்போலப் பகைவராயினும், தளர்ந்த இடத்தைப்பார்த்து, அறிவுடையவர்கள், தாங்களும் நாணத்தை யடைந்து அவர்கட்கு இரங்கி, எதிர்க்கமாட்டார்கள், அறிந்து கொள்வாயாக.

௧௫. அசுரேந்திரனும் விகர்ணனும்

I

அசுரேந்திரன் என்பவன் தாரகாசுரனுடைய மகன். அவன் கொடியவனாகிய அவுணனுடைய மகனாக இருந்தபோதினும் மிக நல்லவனாக விருந்தான். அவுணர்கட்குரிய தீக்குணங்கள் அவனிடஞ் சிறிதும் இல்லை. மிகவுந் தூயவனாகவும் நல்லொழுக்கமுடையவனாகவும் இருத்தலைக்கண்டு அவுணர்கள் நம் குலத்திற் பிறந்தும் இவன் இப்படி நல்லவனாக இருக்கிறானே எப்படிப் பிழைக்கப்போகிறான் என்று எண்ணினார்கள். அவனுக்குத் தீச் செயல்களைக் கற்பிக்க மிகவும் முயன்றார்கள். அவுணர் கூட்டத்துக்குள் இருந்துங்கூட அவனுடைய பண்புகள் சிறிதும் திரியவில்லை. இறுதி வரை அவன் தன்னுடைய நல்லியல்புகளோடிருந்தான்.

II

விகர்ணன் என்பவன் நூற்றுவரில் ஒருவன். நூற்றுவர் அனைவரும் கூற்றுவர்போன்று கொடுமையிற்

சிறந்து விளங்கினார்கள். விகர்ணன் ஒருவன்மட்டும் நல்லவனாக அமைந்திருந்தான். தந்தையாகிய திருதராட்டிரனுடைய கொடுங்குணங்களும், உடன்பிறந்தார்களாகிய துரியோதனன் துச்சாதனன் முதலியவர்களுடைய தீக்குணங்களும் விகர்ணனிடத்திற் சிறிதும் இல்லை. துரியோதனன் முதலாயினோர் தீமைபுரிதற்கு முனைந்து நின்றபோதெல்லாம் அவர்கட்கு அறிவுரைகள் கூறி இடித்துரைத்தான். ஆனால், அறிவிலிகளாகிய அவர்கள் விகர்ணனுடைய நல்லுரைகளைச் சிறிதும் பொருட்படுத்தவில்லை. விகர்ணனை எள்ளி நகையாடி இகழ்ந்துரைத்தார்கள். ஆனால், அவைகளால் விகர்ணன் மன மாறுபாட்டை யடையவில்லை. இறுதிவரையில் தன்னுடைய விழுமிய நல்லியல்புகளோடுதான் அமைந்துநின்றான். அந்தோ! நல்லவனாகிய இவன் பொல்லாதவர்களுடன் பிறந்திருக்கின்றானே! சிறந்து நிற்கக்கூடியவன் நூற்றுவர்களோடு இறந்துபட நேருமே யென்று பலரும் வருந்தினார்கள். சேர்ந்திருக்குங் கூட்டம் கொடியதாக விருப்பினும் நல்லவர்கள் உள்ளந்திரியமாட்டார்களென்பதை அசுரேந்திரனும் விகர்ணனும் உலகிற் குணர்த்திநின்றார்கள்.

வேம்பின் இலையுட் கனியினும் வாழைதன்
தீஞ்சுவை யாதும் திரியாதாம்—ஆங்கே,
இனந்தீ தெனினும் இயல்புடையார் கேண்மை
மனந்தீதாம் பக்கம் அரிது.

—அறிவுடைமை, செய். 4

(இ - ள்.) வேம்பினுடைய இலையிலே பழுத்தாலும், வாழைப் பழமானது தன்னுடைய இனிய சுவையிலே சிறிதும் மாறுபடாது; அதுபோல, தான் சேர்ந்திருக்கும் கூட்டம் கொடியதாக இருந்தாலும், நற்குணமுடையவர்களுடைய உறவானது, உள்ளத்தில் கொடியதாதல் இல்லை.

௩௯. புலவர் வறுமைக்குக் காரணம்

பெரும் புலவர்கள் பலரும் வறுமை மிகுந்தவர்களாகவே உலகில் விளங்கியிருந்தார்கள். தம் பேரறிவிற் கேற்பப் பெருஞ் செல்வத்தைப் பெற்றிருந்த புலவர்கள் ஒருவருமே இலர். பல செல்வர்கள் உலகில் இருப்பினும் அவர்கள் தங்கள் செல்வத்திற்கேற்ற சிரிய அறிவு பெற்றவர்களல்லர். செல்வர்களாக விளங்கிய சிலர் கல்வியைக் கற்கத் தொடங்கிய பிறகு வறுமையைப் பெற்று விளங்கினுர்கள். கல்விப் பொருளுடைமையும் செல்வப் பொருளுடைமையும் தனித் தனியே சிறப்பினையுடையனவாகும். இரண்டும் ஓரிடத்தில் ஒன்ருக அமைந்து நிற்றலை யாண்டுங் காணவியலாது.

ஒரு செல்வன் ஒரு புலவரைக் காணச் சென்ருன். பலவகைச் செய்திகளைப்பற்றியும் உரையாடல் நிகழ்ந்தது. இறுதியில் அவன் புலவரைப் பார்த்து, 'புலவர்களாயினுர் தம் மறிவுக்கேற்ற பொருட்செல்வத்தைப் பெற்றிராமைக்குக் காரணம் யாது? செல்வர்களாயினுர் தம் செல்வப்பெருக்கிற்கேற்ற அறிவைப் பெற்றிராமைக்குக் காரணம் யாது? கல்விச் செல்வமும் பொருட் செல்வமும் ஓரிடத்திற் சேர்ந்து விளங்கினுல் நன்ருக விருக்குமே' என்று கேட்டான்.

புலவர் செல்வனைப் பார்த்து, 'இரண்டும் ஓரிடத்தில் அமைந்து நின்ருல் அவற்றைப்பெற்று நின்றவனுக்கு அளவற்ற சிறப்புண்டாகும். சிலர் செல்வப் பொருள் தான் சிறந்தது கல்விப் பொருள் தாழ்ந்தது என்று எண்ணுகின்றனர். அவ்வெண்ணம் தகுதியானதன்று. செல்வப்பொருள் மிக விரைவில் அழிந்துவிடுவது.

கல்விப்பொருளோ எழுமையுந் தொடர்ந்து நிற்பது. ஆகையால், செல்வப் பொருளினும் கல்விப் பொருள் தான் சிறந்தது. ஏதேனும் ஒரு செல்வம் ஒருவனுக்குப் போதுமென்ற காரணத்தால்தான் இறைவன் இரண்டு செல்வங்களையும் ஒருவனுக்கே யளிப்பதில்லை. மற்று மொரு காரணம் இருக்கிறது. செல்வத்தைத் திரு மகளென்றும் கல்வியைக் கலைமகளென்றும் கூறு கின்றனர். திருமகளுங் கலைமகளும் முறைமையினுல் மாமியும் மருமகளும் ஆவர். இவ்வுலகிலே மாமியும் மருமகளும் உள்ளம் பொருந்தி மனமகிழ்ந்து ஒரு வீட்டில் வாழ்தலைக் காணமுடியாது. மாமியும் மருகி யும் மிகுந்த பகையுடையவர்கள். ஆகையால், திரு மகளுங் கலைமகளும் ஓரிடத்தில் ஒன்ருக அமைந்து நிற்ப தில்லை. கலைமகள் உள்ள விடத்திலே திருமகள் இராள். திருமகள் உள்ளவிடத்தே கலைமகள் இராள். இஃது உலகத்தில் இயற்கையாக அமைந்திருக்கின்றது' என்று கூறினுர். கேட்ட செல்வன், 'நீங்கள் கூறியது உண்மை தான். நம்முடைய வீட்டிலேகூடத் தினமும் மாமிக்கும் மருகிக்கும் போராட்டம் பலமாக நடந்துகொண்டுதான் இருக்கின்றது' என்று கூறிச் சென்ருன்.

பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் பாடழிந்(து)
அல்லல் உழப்ப தறிதிரே—தொல்சிறப்பின்
நாவின் கிழத்தி உறைதலாற் சேராளே
பூவின் கிழத்தி புலந்து.

—அறிவின்மை, செய். 2.

(இ - ள்.) பலவிதமாக நிரம்பிய கல்விப்பயனை யறிந்தவர்கள், தம் பெருமை கெட்டு, துன்பத்தில் வருந்துவதை அறிவீரன்றே? அதற்குக் காரணம் யாதெனின், பழைய சிறப்பினையுடைய கலை மகளானவள் தங்கியிருத்தலால், திருமகளானவள் பிணங்கி அடைய மாட்டாள்.

௭௭. அறிவுரையை அறிவிலிகள் கேளார்

தக்கன் என்பவன் ஆணவத்தில் மிக்கவன். அவன் ஒரு முறை சிவனுர் எழுந்தருளிய கைலைக்குச் சென்றுன். சிவனுர் ஒரு வகையில் தக்கனுக்கு மருகனுக அமைந்து நின்ருர். ஆகவே, தன் மருகனுகிய சிவன் தன்னைக் கண்டதும் எழுந்து வணக்கம் புரியவில்லையென்று பிணக்கம் கொண்டான். இறைவனை இகழ்ந்து ஒரு வேள்வியைச் செய்யத் தொடங்கினுன். தான் சிவனை விட உயர்ந்த நிலைமையை அடைந்து விளங்கவேண்டு மென்பது தக்கனுடைய எண்ணம். வேள்விக்கு ஆவன விரைந்து நடந்தன. தேவர்கள் பலரும் முனிவர் கள் பலரும் தக்கனிடம் வந்தார்கள். 'இறைவன்தான் முழுமுதற் கடவுள். நீ அப் பெருமானை இகழ்ந்து வேள்வி புரிதல் கூடாது. செய்வையாயின் அழிந் தொழிவாய்' என்று அறவுரைகள் பலவற்றைத் திறம் பட வுரைத்தார்கள். பலருடைய உரைகளையுந் தக்கன் கேட்கவில்லை. தான் எண்ணியவாறு இயற்றுதற்கே அவன் முனைந்து நின்ருன். அன்று அறிவுடையார் அவனிடங் கூறிய வுரைகள் முற்றும் பயன் சிறிதும் அற்ருெழிந்தன. ஆணவத்தால் அறிவழிந்து நின்ற அவன் முடிவில் முடிந்தொழிந்தான்.

பன்றிக்கூழ்ப் பத்தரில் தேமா வடித்தற்ருல்
நன்றறியா மாந்தர்க் கறத்தா றுரைக்குங்கால்
குன்றின்மேற் கோட்டுந் தறிபோல் தலைதகர்ந்து
சேன்றிசையா வாகுஞ் செவிக்கு.

—அறிவின்மை, செய். 7

(இ - ள்.) நன்மையை யுணராத மக்கட்கு அறத்தினது தன்மை யைச் சொல்லுமிடத்து, மலைமேல் அடிக்கப்பெறுங் கட்டுத்தறியைப் போல தலை சிதறி, காதுக்குப்போய்ப் பொருந்தாதனவாக முடியும். ஆகவே அவர்களிடம் அறவழிகளைக் கூறுதல் பன்றிக்குக் கூழ் வார்க்குந் தொட்டியில் இனிய மாங்கனியின் சாற்றைப் பிழிந்த வாருக முடியும்.

௩௮. திருமகளை இகழ்ந்த செந்தமிழ்ப் புலவர்

செந்தமிழ்ப் புலவர் ஒருவர் செல்வர்கள் பலர்மீது அருமையான செய்யுட்கள் பாடிக்கொண்டு சென்றார். அச் செல்வர்களிற் சிலர் பாட்டைக் கேட்டார்கள். பலர் கேட்பதற்குக்கூடத் தங்களுக்கு விருப்பமில்லையென்று கூறிப் புலவரை அனுப்பிவிட்டார்கள். அச்செல்வர்களுடைய குணம் காட்டுமிராண்டித்தனம் நிறைந்ததாக விருந்தது. சிலர் கடுஞ்சொற்கள் பல கூறி விரட்டினார்கள். சிலர் வறியவர்களாக இருந்தபோதினும் அருங்குணம்படைத்த அன்பர்களாக விருந்தார்கள். அவர்கள் புலவரைப் பெரிதும் போற்றினர். உணவு முதலியன கொடுத்துப் புரந்தார்கள். புலவருடைய வறுமை நீங்குமாறு பொருளுதவி செய்யவேண்டும் என்னும் விருப்பம் அவர்களுக்கு மிகுதியாகவிருந்தது. ஆயினும் அவர்களால் புலவருக்கு ஒன்றையுங் கொடுக்க முடியவில்லை. அவர்கள் தங்களுடைய வறுமை நிலைமையைப் புலவருக்கு விளக்கிச்சொன்னார்கள். அவ்வறியவர்கள் வாழ்ந்திருந்த இடமோ மிகவும் மோசமான சிறுகுடிசைகளாக இருந்தன. பிசினச் செல்வர்கள் வாழ்ந்திருந்த இடமோ பெரிய மாடகூடங்களோடு கூடிய அரண்மனைகளாக விளங்கின. செல்வர்களுடைய தீக்குணங்களும் அவர்களுடைய பெருமித வாழ்வும் வறியவர்களுடைய நற்குணங்களும் அவர்களுடைய எளிய வறுமை வாழ்வும் புலவருள்ளத்தே மாறிமாறித் தோன்றின.

செல்வர்கள் முற்பிறப்பு நல்வினையினாற் செல்வத்தைப் பெற்றிருக்கிறார்கள். வறியவர்களோ இப்பிறப்பில் நற்குணமுடையவர்களாக விருந்தபோதினும் முற்பிறப்பிற் செல்வர்களாகவிருந்து அப்பிறப்பில் மேற்

கொண்டிருந்த தீக்குணப்பண்பால் வறியவர்களாக இருந்து அல்லலுறுகின்றார்கள். இது புலவருக்கு நன்ருகத் தெரியுமாயினும் அவருக்குத் திருமகள்மீது மிகுந்த வெறுப்புண்டாயிற்று. அவர், 'திருமகளே! நீ நன்மக்களிடத்திற் சென்று பொருந்தாமல் புன்மக்களிடத்திலேதான் சென்று பொருந்துகின்ருய்! உன்னுடைய செயல் தகுதிவாய்ந்ததாகத் தெரியவில்லை. நீ உலகில் இருப்பதைவிட அழிந்தொழிவதுதான் நல்லது. ஆகையால் அழிந்து தொலைவாயாக' என்று கூறித் தம்முடைய சினமானது அடங்குமாறு திருமகளை இகழ்ந்து பாடிச்சென்ருர்.

நாருத் தகடேபோல் நன்மலர்மேற் பொற்பாவாய்
நீருய் நிலத்து விளியரோ—வேருய
புன்மக்கள் பக்கம் புகுவாய்நீ பொன்போலும்
நன்மக்கள் பக்கந் துறந்து.

—நன்றியில் செல்வம், செய். 6.

(இ - ள்.) மணம் வீசாத புறவிதழ்களைப்போல, நல்ல தாமரை மலரின்மேல் எழுந்தருளியிருக்கின்ற திருமகளே! நீ பொன்னைப் போன்ற நன்மக்களின் இடத்தை நீங்கி, நன்மக்களினும் வேருய, இழிந்த மக்களிடத்திற் சேர்வாய் ஆகையால், நிலவுலகிலே நீ பொடியாகக் கெடுவாயாக.

௩௧. பிசினன் செல்வம் பிறனுக்குக் கிடைத்தது

செட்டிமார் நாட்டிலே ஒரு பெருஞ்செல்வன் இருந்தான். அவனுடைய செல்வம் ஏறக்குறைய ஒரு கோடி ரூபாவரை மதிப்பிடத்தக்கதாக விருந்தது. அவனுக்குச் செல்வம் அளவுகடந்து இருந்தபோதினும் மகச்செல்வம் அடியோடு இல்லை. மக்கட் செல்வத்தை விரும்பி அவன் எத்தகைய அறத்தையுஞ்செய்யவுமில்லை.

ஏழை எளியவர்கட்கு இரங்கி அவன் உதவி செய்ததுமில்லை. 'அந்தோ! பெருஞ்செல்வம் பெற்றும் அதனை நல்வழியில் செலவிடவறியாது வீணே பொருள் காக்கும் பூதமாக இருக்கின்றனே' என்று அனைவரும் வருந்தினர். ஆனால், சிலர் 'அச் செல்வத்தை மனம் போனவாறு செலவு செய்து களிப்பதற்கு நல்வினை செய்தவன் எவனுவது இருப்பான்' என்று பேசிக்கொண்டனர்.

செல்வனுக்கு இறுதிக்காலம் நெருங்கிவிட்டது. தனக்குப்பிறகு தன்னுடைய செல்வத்தைப் போற்றிப் பாதுகாப்பதற்குத் தக்க ஆள் வேண்டுமேயென்று எண்ணமிட்டான். உறவினர்களுள் ஒரு சிறந்த இளைஞனைத் தேர்ந்தெடுத்து அவனை வளர்ப்புமகனாகக் கொள்ளுமாறு செல்வனுக்குப் பலரும் அறிவுரை கூறினர். வேறு வகையறியாத செல்வன் அதற்கு இணங்கினான். தக்க அகவையடைந்த ஓர் இளைஞனைத் தனக்கு வளர்ப்புமகனாக எடுத்துக்கொண்டான். அவனுக்குத் திருமணமுஞ் செய்துவைத்தான். வளர்ப்பு மகனாக வந்தவன் ஒரு வறுமைமிக்க குடும்பத்திற் பிறந்தவனாயினுஞ் சிறந்த அறிவு நலம் அமையப்பெற்றவன். பொருள் காக்கும் பூதமாக இருக்குங் கொள்கையை அவன் அடியோடு வெறுத்தான். வீடு செல்வநிலைமைக்குத் தக்கவாறில்லாமல் எளிமையான நிலைமையைப் புலப்படுத்துவதாகவிருந்தது. முதலாவது வேலையாக வளர்ப்புமகன் அந்த வீட்டை இடித்து அப்புறப்படுத்திவிட்டுப் பெருஞ்செலவில் ஓரழகிய வீட்டைக் கட்டினான். வேலையாட்கள் பலரை வீட்டில் அமைத்துக்கொண்டான். இன்ப நுகர்விற்கு வேண்டிய ஏற்பாடுகள் பலவற்றையும் உள்ளம் போனவாறு அமைத்துக்கொண்டான். செல்வம் மிகுதியாக இருக்கிறதே என்னசெய்வது என்று

எண்ணமிட்டு ஏழை எளியவர்கட்கு முதல்வள்ளலாகப் பொருளை வாரிவாரி வழங்கினான். இளைஞனுடைய போக்கைக்கண்ட செல்வன் அவன் செலவுசெய்வதைத் தடுப்பதற்கு முதலில் முயன்றான். ஆனால், இளைஞன் அதனைக் கேட்கவில்லை. செல்வம் பெற்றதற்கேற்ப இளைஞன் வாழ்க்கை நடத்துவதைக்கண்ட பலரும் இளைஞன் செய்வதுதான் தகுதியான செயல் என்று எண்ணி அவனைப் போற்றினார்கள். பிசினச் செல்வன் மனங்குமுறிச் சில நாள்களில் மாண்டு தொலைந்தான். கொடுத்தலுந் துய்த்தலுந் தேற்றா இடுக்குடை யுள்ளத் தான் பெற்ற பெருஞ்செல்வத்தைப் பிறர் நன்கு நுகர்ந்து மகிழ்வர் என்பதை உலகம் அந்தப் பிசினச்செல்வன் பால் அறிந்துகொண்டது.

கொடுத்தலுந் துய்த்தலுந் தேற்றா இடுக்குடை
உள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வம் இல்லத்(து)
உருவுடைக் கன்னியரைப் போலப் பருவத்தால்
ஏதிலான் துய்க்கப் படும்.

—ஈயாமை, செய். 4.

(இ - ள்.) ஈதலையும் உண்டலையும் அறியாத, கையழுத்தமுள்ள மனத்தையுடையவன் அடைந்துள்ள பெரிய செல்வமானது, தனது வீட்டில் பிறந்த அழகிய மங்கையைப் பிறர் மணஞ்செய்துகொண்டு இன்பம் நுகர்தலைப்போல, தகுந்த காலத்திலே யாதுந் தொடர்பில்லாத பிறனால் நுகரப்பெறும்.

௪௦. களவுக்குச் சென்ற புலவர்

ஒரு புலவர் அறிவில் மிகவுஞ் சிறந்து திகழ்ந்தார். ஆயினும், அவருடைய அறிவு நலத்தை எவரும் நன்குணர்ந்து போற்றவில்லை. புலவர்கள் பலரையும் பற்றி வருத்தும் வறுமை அந்தப் புலவரையும் பற்றி மிகவும் வருத்தியது. வறுமையானது மிகவுங் கொடியது. வயிற்றுப்பசி புலவரை வாட்டியது. வயிற்றுப்பசி வந்தபிறகு புலவருடைய அறிவு நேரியவழியில் எவ்வாறு நிற்கும்? புலவர் பல இடங்களினுஞ் சுற்றிக்கொண்டு ஓர் அரசனுடைய அரண்மனைக்குச் சென்றார். அந்த அரசன் அறிவிற்சிறந்தவன். அறிஞர்களை மகிழ்ந்து போற்றுபவன். புலவரை அரசனிடம் நெருங்குமாறு யாரும் விடவில்லை. புலவர் அரண்மனையின் ஓரிடத்திற் பசியால் வாடி வருந்திக்கொண்டிருந்தார். புலவருடைய அறிவு நற்குணங்கள் முதலியன வறுமையின் கொடுமையாற் பறிபோயின. இவ்வாறு வறுமையால் வாடுவதைவிடக் களவு செய்தேனும் பிழைக்கலாம் என்று அவர் முடிவு செய்தார். அரண்மனையின் உள்ளே சென்று அரசனுடைய பள்ளியறையிற் பதுங்கியிருத்தல்வேண்டும். அரசியின் அணிகலன்களை அவள் உறங்கும்பொழுது கழற்றிக்கொண்டு சென்றுவிட வேண்டுமென்று முடிவுசெய்தார். அமயம் நோக்கி அரசனுடைய பள்ளியறைக்குள் நுழைந்து, அரசனும் அவன் மனைவியும் படுத்துறங்குங் கட்டிலுக்குக் கீழே பதுங்கிக்கொண்டார்.

அரசனும் அரசியும் தமது இரவுச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு உறங்குவதற்கு வந்தனர். அரசன் தான் உறங்கத் தொடங்குமுன் தினமும் இறைவன்மீது

ஒரு பாட்டுப்பாடுவது வழக்கம். அந்த வழக்கத்தை யொட்டி அன்றும் பாடத் தொடங்கினன். அன்று பாடல் எளிதாக அமையவில்லை. இரண்டு அடிகள் தாம் தோன்றின. இரண்டு அடிகள் தோன்றவில்லை. நீண்ட நேரம் அரசன் பாட்டை முடிக்க முடியவில்லை. பாடிய அடிகளையே திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்தான். அரசனல் முடிக்க முடியாத பகுதி புலவருக்கு மிகு எளிதாகத் தோன்றிவிட்டது. புலவர் தாம் இருக்குமிடத்தையும் மறந்து தம்முள்ளத்தில் தோன்றிய பகுதியை வெளியே சொல்லிவிட்டார். அரசன் பாட்டை எளிதாக முடித்துவிட்டான். முடித்து விட்டுக் கட்டிலுக்குக்கீழே பார்த்தான்! கண்டான் புல வரை! நிகழ்ந்ததை மன்னன் வினவினன். புலவர் உண்மையைக் கூறினர். அரசன் அவருடைய விருப் பப்படி தன் மனைவியின் நகைகளைப் புலவருக்குப் பரிசாக அளித்தனுப்பினன். அறிவு நற்பண்பு முதலி யன வறுமைக் கொடுமையால் மறைந்து போகு மென்பதை இப்புலவர்பால் உலகம் உணர்ந்து கொண்டது.

நீர்மையே யன்றி நிரம்ப எழுந்ததம்
கூர்மையும் எல்லாம் ஒருங்கிழப்பர்—கூர்மையின்
முல்லை யலைக்கும் எயிற்றாய் நிரப்பென்னும்
அல்லல் அடையப்பட் டார்.

—இன்மை, செய். 7.

(இ - ள்.) கூர்மையையுடைய முல்லையரும்புகளை வருத்து கின்ற பற்களமையப்பெற்ற பெண்ணே ! வறுமையென்று சொல்லப் பெறுகிற துன்பஞ் சேரப்பெற்றவர்கள், நற்பண்புகளே யல்லாமல் மிகுதியாக உள்ளெழுந்த, தம்முடைய நுண்ணறிவையும் மற்றவை களையும் ஒருசேர இழந்துவிடுவர்.

௭௪. மானம்புரிந்த மன்னன்

தீவினைப்பயனால் ஓர் அரசன் பகைவர்களுடைய கையிற் சிக்கிக்கொண்டான். அவர்கள் அவனைச் சிறைச் சாலையில் அடைத்துவிட்டார்கள். சிறையில் அடைக்கப் பெற்ற அரசன் பெருஞ் சிறப்புடன் வாழ்ந்திருந்தவன். புலவர்கட்குக் கற்பகதருவாக அமைந்திருந்தவன். சிறைச்சாலைக் காவலர்கள் அந்த அரசனைத் தக்கவாறு நடத்தவில்லை. மிகுந்த சிறுமைக் குணத்துடன் நடந்து கொண்டார்கள். ஒருநாள் அரசனுக்கு நீர் வேட்கை மிகுதியாக இருந்தது. சிறைக் காவலர்களைத் தண்ணீர் வேண்டுமென்று கேட்டான். பெருமையோடு வாழ்ந் திருந்த அந்த மன்னனுக்குக் காவலர்கள் உடனே தண்ணீர் கொண்டுவந்து கொடுக்கவில்லை. நீண்ட நேரம் பொறுத்துக் கொண்டுவந்து கொடுத்தார்கள். அவ்வாறு கொடுத்ததையும் ஒழுங்காகக் கொடுக்க வில்லை. மிகுந்த இறுமாப்புடன் ஒரு காவலன் இடது கையை நீட்டிக் கொடுத்தான். அவ்வாறு மிகுந்த இழிதகைமையுடன் கொடுத்த தண்ணீரை வாங்கிக் குடிப்பதற்கு அரசனுக்கு விருப்பமில்லை. இவ்வாறு நம்மை இழிவுபடுத்திக் கொடுக்குந் தண்ணீரை வாங்கிக் குடிப்பதைவிடக் குடியாமல் நீர் வேட்கையுடன் இருந்து உயிர் விடுதலே சிறந்ததென்று முடிவு செய்தான். தனக்குத் தண்ணீர் வேண்டாமென்று கூறிவிட்டான். 'வேண்டாவிட்டாற் சும்மாகிட' என்று கூறிவிட்டார் கள் சின்னத்தனம் படைத்த சிறைக்காவலர்கள். அதன் பிறகு அரசன் அவர்கள் கொடுத்த உணவு தண்ணீர் முதலியவற்றையுந் தொடாமலிருந்து உயிர் விட்டான். பெருமையிற் சிறந்தவர்கள் தமக்கு இழிவு நேருமாறு கிடைக்கும் ஒன்றினைப் பெற்றுக்கொள்வதைவிடப்

பெற்றுக்கொள்ளாமலே யிருந்து மாண்டுபோவார்கள் என்பது மாண்பிற்சிறந்த இம் மன்னனிடம் நன்கு தெளியப்பட்டது.

கடமா தொலைச்சிய கானுறை வேங்கை
இடம்வீழ்ந்த துண்ணு திறக்கும் - இடமுடைய
வானகம் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மானம் அழுங்க வரின்.

—மானம், செய். 10.

(இ - ள்.) காட்டாவைக் கொல்லு மியல்பு பொருந்திய காட்டுப் புலியானது, தனது இடப்பக்கத்தில் வீழ்ந்ததைத் தின்னுமற் போய் விடும்; சிறப்புமிக்க பெரியோர், இடமகன்ற தெய்வலோகம் கை வருவதாக இருந்தாலும், பெருமையானது கெடுமாறு வந்தால் அதனை விரும்பமாட்டார்கள்.

௨௨. குசேலரும் கண்ணபிரானும்

குசேலருங் கண்ணபிரானும் உரிமையிற் சிறந்த அருமை நண்பர்கள். இருவரும் இளமைக் காலத்தில் ஒன்ருகக் கல்விகற்றவர்கள். இருவரும் பெரியவர்களானுர்கள். கண்ணபிரான் துவாரகையிற் செல்வச் சிறப்புடன் இனிய வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தார். குசேலருக்குத் திருமணம் நடைபெற்றது. அவருக்கு இருபத்தேழு மக்கள் புற்றீசல் போலப் பிறந்தார்கள். சில பிள்ளைகளைப் பெற்றவர்கள் அப்பிள்ளைகளைக் காப்பாற்றுவதே அருமையாக விருக்கும்போது, இருபத்தேழு மக்களைப் பெற்றவர்கள் அப்பிள்ளைகளைக் காப்பாற்றுவதற்குப் பட்ட பாட்டைப்பற்றிப் பகரவும் வேண்டுமா? மிகு விரைவிற் குசேலரை வறுமைநோய் பற்றியது. அதனுல் அவர் மிகுந்த தொல்லைப்பட்டார். நாளடைவில் வறுமை வளர்ந்து சிறுமையைத் தந்தது.

குசேலருடைய மனைவி குசேலரைப் பார்த்து, 'தாங்கள் தங்களுடைய இளமைக்காலத்து நண்பரான

கண்ணபிரானைச் சென்று பார்த்துவிட்டு வாருங்கள். அவ்வாறு பார்ப்பீர்களாயின் நம்முடைய வறுமைக்கு ஏதேனும் வழி பிறக்கும்' என்று வற்புறுத்திக் கூறினாள். ஆனாற் குசேலர் கண்ணபிரானைச் சென்று பார்ப்பதற்கு விரும்பவில்லை. 'வறுமையிலுள்ள நாம் செல்வர்களைச் சென்று பார்த்தாற் சிறுமை யேற்படு மென்று கூறினார். பன்முறை தடுத்துக் கூறியும் மனைவி கேளாமல் மீண்டும் வற்புறுத்தினாள். பிறகு குசேலர் ஒருவாறு தெளிந்து கண்ணபிரானைச் சென்று கண்டார். தாம் கொண்டுபோயிருந்த அவலையும் அப்பண்ணவனிடங் கொடுத்தார். கண்ணபிரானும் அவ்வவலைத் தின்று மகிழ்ந்தார். சிலநாள் குசேலர் கண்ணபிரானுடைய இல்லத்தில் தங்கியிருந்து பிறகு ஊரை நோக்கிப் புறப்பட்டார்.

குசேலர் தமது வறுமைத் துன்பங்களைக் கண்ணபிரானிடஞ் சொல்லவில்லை. யாதுங் கேட்கவும் இல்லை. அவ்வாறு கேட்பதையும் அவர் மிகுந்த இழிவாக எண்ணித் திரும்பிவிட்டார். 'கரவாத திண்ணன்பிற் கண்ணன்னார் கண்ணும் இரவாது வாழ்வதாம் வாழ்க்கை' என்பதை வறுமையிற் சிறந்திருந்த குசேலர் உலகிற்குத் தெரிவித்தார். குசேலர் கண்ணபிரானிடம் எதனையுங் கேட்டுப் பெறாமல் திரும்பியபோதினும் அப்பிரானுடைய அருந்திருவருளால் பெருந்திருவடைந்து உலகிலே சிறந்து மகிழ்ந்திருந்தார்.

கரவாத திண்ணன்பிற் கண்ணன்னார் கண்ணும்
இரவாது வாழ்வதாம் வாழ்க்கை—இரவினை
உள்ளுங்கால் உள்ளம் உருகுமால் என்கொலோ
கொள்ளுங்காற் கொள்வார் குறிப்பு.

இரவச்சம், செய். 5.

(இ - ள்.) ஒளிக்காத வலிய அன்பினையுடைய கண்ணைப்போற் சிறந்தவர்களிடத்தும், ஐயமேற்காமல் வாழும் வாழ்க்கையே வாழ்க்கையாகும்; ஐயமேற்றலை நினைக்கும்போது, மனமானது நெகிழ்ச்சியை அடையும்; அவ்வாறாகவும், இரப்பவர்களின் நோக்கம், இரத்தல் செய்து பொருளைப் பெறும்போது எதனை நாடி நிற்குமோ?

௨௩. அறிவிலாற் கஞ்சிய அறிஞர்

அறிஞர்கள் பலர் கூடிய பேரவை யொன்றிற் சொற்போர் நிகழ்ந்தது. ஒரு செய்தியை நிலைநாட்டுதற் பொருட்டுச் சிலரும், நிலைபெறாமல் வீழ்த்துதற் பொருட்டுச் சிலரும் சொற்போர் புரிந்தனர். சொற்போர் பலநாள் தொடர்ந்து நடைபெற்றது. ஒருநாள் ஓர் அறிஞர் தம் பக்கத்தை நிலைநாட்டுதற் பொருட்டுச் சொற்போர் நிகழ்த்திக்கொண்டிருக்கும்போது எதிர்ப் பக்கத்திலே ஒரு முரடன் அறிஞர் கூற்றை மறுத்தற்கு எழுந்தான். அவன் உண்மையறிவு சிறிதும் இல்லாதவன். சொற்போர் முறைப்படி பேசாமல் அவன் தன்னுடைய மனம்போனவாறு பேசுபவன். அவன் மிகுந்த உடல் வன்மை படைத்தவன். வாய்ப்போரிலே தனக்குத் தோல்வி வருமென்று தெரிந்தால் உடனே கைப்போரிலே இறங்கிவிடுவான். அவனுடைய இயல்பு விலங்கின் இயல்பைப் போன்றது. அந்த முரடன் எழுந்து பேசத் தொடங்கியவுடன் உண்மையறிவு படைத்த அறிஞர் தம் பக்கத்தை நிலைநாட்டிப் பேசாமல் உட்கார்ந்துவிட்டார். முரடனோ மனம் போனவாறு சண்டப் பிரசண்டனாக வெளுத்து வாங்கிக் கொண்டிருந்தான். சிலர் அறிஞரைப் பார்த்துத், 'தாங்கள் ஏன் சொற்போரை நிறுத்திவிட்டு உட்கார்ந்து விட்டீர்கள்?' என்று கேட்டனர். அதற்குப் புலவர், 'நான் இப்போதே பொக்கை வாயாகப் போவதற்கு

விரும்பவில்லை. என்னுடைய வாயில் இன்னுஞ் சில காலத்திற்குப் பற்கள் இருக்கவேண்டுமென்று எண்ணு கிறேன். 'பல்லும் போனுன் சொல்லும் போனுன்' என்று ஒரு பழமொழி இருக்கின்றது' என்று கூறினர்.

அறிஞர் கூறியதைக் கேட்டோர், 'தாங்கள் கூறுவ தன் பொருள் யாது? நன்கு விளங்கவில்லையே!' என்று கேட்டனர். அதற்குப் புலவர், 'வெற்றியையே நோக்க மாகக்கொண்டு உண்மையைச் சிறிதும் பொருட்படுத் தாமல் விலங்குகளைப்போல முரட்டுத்தனமாக நடந்து கொள்பவர்களிடம் யாதும் பேசுதல் கூடாது. அவ் வாறு பேசினுல், முரடர்கள், சொற்போரில் தோல்வி வருமென்று கண்டவுடன் மற்போரில் இறங்கித் தம்மை யெதிர்த்துப் பேசுபவர்களுடைய பல்லையுடைத்துக் கையிலே கொடுத்துவிடுவார்கள். ஆகையால், அறி வில்லாதவர்களோடு எதிர்த்துப் பேசுதல் கூடாது' என்று தம்முடைய உள்ளக்கிடக்கையை மெள்ளக் குறிப்பிட்டார். அறிஞர் அறிவிலாரை எதிர்த்தல் கூடாது என்றுரைத்ததை அனைவரும் ஏற்றுக்கொண்டு அவரைப் பாராட்டினர்.

வென்றிப் பொருட்டால் விலங்கொத்து மெய்கொள்
கன்றிக் கறுத்தெழுந்து காய்வாரோ—டொன்றி [ளார்
உரைவித் தகமெழுவார் காண்பரே கையுட்
சுரைவித்துப் போலுந்தம் பல்.

அவையறிதல், செய். 5.

(இ - ள்.) வெற்றிக்கொள்ள வேண்டுமென்கிற காரணத்தால், விலங்குகளை நிகர்த்து உண்மைப் பொருளைக் கொள்ளாதவர்களாய் மனம் புழுங்கிச் சினந்து மிகுதியாக ஆரவாரஞ் செய்வாருடன், பொருந்தித் தம் சொல்லின் திறமையைக் காட்டுதற்கு எழுகின்றவர் கள், சுரைவிதையைப் போன்று விளங்கும் தம்முடைய பற்களைக் கையினிடத்திலே பார்ப்பார்கள்.

௫௫. அறிஞர் சவுக்கடி

ஓர் அவையின்கண் அறிஞர் ஒருவர் மிக அருமையான சொற்பொழிவு செய்துகொண்டிருந்தார். அவருடைய சொற்பொழிவு அனைவரும் போற்றக்கூடிய சிறப்பு வாய்ந்ததாக அமைந்திருந்தது. அறிவு மிக்க சிலர் தாம் அச்சொற்பொழிவைக் கருத்துடன் கேட்டுக் கொண்டிருந்தனர். பலர் அறிஞருடைய சொற்பொழிவை ஒரு பொருளாக மதித்துக் கேட்கவில்லை. சிலர் ஒருவரோடொருவர் பேசிக்கொண்டிருந்தனர். சிலர் நாளிதழ் படித்துக்கொண்டிருந்தனர். ஒரு சிலர் தூங்கிவிழுந்துகொண்டிருந்தனர். மற்றுஞ் சிலரோ எழுந்து போவதும் வருவதுமாக இருந்தனர். பெரும்பான்மையோர் தம்முடைய சொற்பொழிவைக் கேளாமையைக்கண்ட சொற்பொழிவாளருக்கு மிகுந்த வருத்தமுண்டாயிற்று. ஓர் அவையில் ஒரு சொற்பொழிவாளர் பேசிக்கொண்டிருக்கும்போது அதனைக் கேளாமல் வீணுரையாடிக் கொண்டிருப்பதும் தூங்கிக் கொண்டிருப்பதும் நாளிதழ் படித்துக் கொண்டிருப்பதும் பெருந்தவறாகும்.

சொற்பொழிவாளர் தம்முடைய பேச்சைப் பொருட்படுத்தாமல் வேறு வழியிற் கருத்தைச் செலுத்தியவர்கட்கு அறிவு புகட்டவேண்டுமென்று எண்ணினார். அவையோர்களைப் பார்த்து, ‘நான் இப்பொழுது ஒரு சிறந்த செய்தியைக் கூறப்போகிறேன்; எல்லோரும் மிகுந்த கருத்துடன் கேளுங்கள்’ என்றார். நாளிதழ் படித்துக்கொண்டிருந்தவர்கள் அதனை மடித்து வைத்தனர். அரையுறக்கத்திலிருந்தவர்கள் கண்ணைக் கசக்கிக் கொண்டு நிமிர்ந்து உட்கார்ந்தனர். உரையாடிக்

கொண்டிருந்தவர்களோ உரையாடலை நிறுத்திவிட்டுச் சொற்பொழிவாளர் கூறுவதைக் கேட்கத் தொடங்கினார்கள்.

சொற்பொழிவாளர் அவையோர்களைப் பார்த்து, 'அறிவுடையவர்கள் அறநெறிகளை உரைக்கும்பொழுது தகுதியற்ற கீழ்மக்கள் அந்த அறநெறிகளை ஒருபொருட்படுத்திச் சிறிதுங் கேட்கமாட்டார்கள். தோலைக்கவ்விக் கடிக்கும் புலையர்களுடைய நாயானது பாற்சோற்றின் இனிய சுவையை நுகர்தற்குச் சிறிதும் விரும்பமாட்டாது. அதைப்போன்றதுதான் தகுதியற்ற கீழ்மக்களின் போக்கும்' என்று கூறித் தம்முடைய சொற்பொழிவைக் கேளாமல் வேறு நோக்கமாக இருந்தவர்களின் போக்கைப் பெரிதுங் கண்டித்தார். அதனைக் கேட்டுச் சொற்பொழிவைப் பொருட்படுத்தாதிருந்தவர்கள் மிகுந்த நாணத்தையடைந்தனர். இனிமேல் அவையில் வேறு போக்குடன் இருத்தல்கூடாதென்றும் அவர்கள் முடிவுசெய்துகொண்டு அவ்வாறே நடக்கலாயினர்.

அவ்விய மில்லார் அறத்தா றுரைக்குங்கால்
செவ்விய ரல்லார் செவிகோடுத்துங் கேட்கலார்
கவ்வித்தோல் தின்னுங் குணுங்கர்நாய் பாற்சோற்றின்
செவ்வி கொளல்தேற்று தாங்கு.

புல்லறிவாண்மை, செய். 2.

(இ - ள்.) தோலைக்கடித்துத் தின்னுகின்ற பறையருடைய நாயானது, பாற்சோற்றின் சுவையை நுகர்தற்கு அறியாததைப் போல, பொறாமையற்ற பெரியோர்கள் அறநெறியைச் சொல்லும்பொழுது, நல்லவர்கள் அல்லாதவர்கள் காதுகொடுத்துங்கூடக் கேட்கமாட்டார்கள்.

௬௫. இழிக்கப்பட்ட செல்வன்

ஒரு செல்வன் மிகுந்த சிறப்புடனும் பெருமையுடனும் வாழ்ந்துகொண்டிருந்தான். அவனுக்கு அகவை முதிர்ந்து விட்டது. அவனுடைய மக்கள் குடும்பத்தின் செயல்களை மேற்கொண்டு எல்லாவற்றையும் பார்த்து வந்தனர். அந்தச் செல்வன் சிலசமயங்களில் துறவறத்தை மேற்கொண்டு வீட்டைவிட்டுப் போய்விடலாமா வென்று பார்த்தான். ஆனால், அவனுக்குப் போதிய மனவுறுதியில்லாமல் வீட்டைவிட்டுப் போகவில்லை. பொருள் வருவாய் குடும்பச்செயல் முறைகள் முதலியன அவனைவிட்டு நீங்கியபிறகு அவனை யாரும் ஒரு பொருட்படுத்தவில்லை. வீட்டில் வேலைசெய்யும் வேலைக்காரர்கள் கூட ஒரு பொருட்படுத்தாமல் நடக்கலானார்கள். வீடு கூட்டும் வேலைக்காரி ஒருநாள் வீட்டுத்திண்ணையைக் கூட்டுதற்கும் மெழுகுதற்கும் வந்தாள். கிழட்டுச் செல்வன் திண்ணையில் உட்கார்ந்துகொண்டிருந்தான். வேலைக்காரி அவனைப் பார்த்துத், 'திண்ணையைக் கூட்டி மெழுகப்போகிறேன்; போய்வெளியே உட்கார்ந்திரு; பிறகு வரலாம்' என்று கூறினாள்.

வேலைக்காரி அவ்வாறு கூறிய சமயத்தில் சமணத் துறவியொருவர் அந்தக் கிழட்டுச் செல்வனுடன் பேசிக் கொண்டிருந்தார். அவர் கிழட்டுச் செல்வன் மிக இழிவாக நடத்தப்படுதலைக்கண்டு உள்ளம் வருந்தினார். பிறகு அவர் அந்தக் கிழவனைப்பார்த்து, 'நீர் தகுந்த காலத்தில்தானே உயிர்க்கு உறுதியை நாடித் துறவறத்தை மேற்கொண்டு சென்றிருப்பீராயின் இவ்வாறு வேலைக்காரியால்கூட இழிவாக நடத்தலைப் பெற்றிருக்க மாட்டீர். அகவை முதிர்ந்தபிறகும் இல்லறத்திலேயே

இருப்பதால்தான் இந்த அல்லல்களெல்லாம் ஏற்படுகின்றன. ஆகையால், நீர் துறவறத்தை மேற்கொண்டு செல்லுதலே அல்லல்கள் எல்லாவற்றிலுமிருந்தும் நீங்கி நலம்பெற வழியாகுமென்று அறவுரைகள் பல கூறியருளினர். கிழவன் சமணத்துறவி கூறியது உண்மையே என்றுணர்ந்து உடனே துறவறத்தை மேற்கொண்டு சென்று நன்மையடைந்தான்.

முப்புமேல் வாராமை முன்னே அறவினையை
ஊக்கி யதன்கண் முயலாதான்—ஊக்கிப்
புறத்திரு போகென்னும் இன்னச்சொ லில்லுள்
தொழுத்தையாற் கூறப் படும்.

புல்லறிவாண்மை, செய். 6.

(இ - ள்.) முதுமையானது தன்மேல் வருவதற்குமுன்னே, அறச்செயலை மேற்கொண்டு இளமைப் பருவத்தின்கண் அதனைச் செய்யாதவன் வீட்டிலுள்ள வேலைக்காரியாலும், உறுதிகொண்டு 'வெளியே இரு போ' என்கின்ற கடுஞ்சொற் கூறப்பெறுவான்.

௩௯. சயத்திரதன் மனக்கோட்டை

அபிமன்னனைக் கொன்றுவிட்ட சயத்திரதனை எப்படியேனுங் கொன்று தீர்ப்பதற்குக் கண்ணபிரானும் அருச்சுனனுந் திட்டம்போட்டுச் சூழ்ச்சி செய்துகொண்டிருந்தார்கள். அவனை எப்படியேனும் இன்று ஒரு தினம் மட்டும் சாவாமல் பாதுகாத்துவிட்டால் பிறகு நாடு நம்முடையதேயாகுமென்று எண்ணிக்கொண்டிருந்தான் துரியோதனன். சயத்திரதனே பலவாறு மனக்கோட்டை கட்டிக்கொண்டிருந்தான். 'இன்று அருச்சுனன் மாண்டொழிவான். அருச்சுனன் மாண்டுபோனல் மற்றவர்களால் யாதும் முடியாது. அவர்களும் இறந்தொழிவார்கள். நாடு முழுவதும் துரியோதனனுக்கே

உரிமையாக அமையும். அவ்வாறு அமைந்தால் நாம் மிகுந்த சிறப்பையடையலாம். துரியோதனன் நம்மை மிகவும் போற்றிப் பாராட்டுவான்' என்று பலவாறு எண்ணமிட்டுக்கொண்டும், மேற்கொண்டு செய்ய வேண்டியதைப்பற்றித் திட்டம் போட்டுக்கொண்டும் இன்பக்கடலிலே மிதந்துகொண்டிருந்தான். அவனுடைய மகிழ்ச்சி அளவுகடந்ததாக விருந்தது. அவன் இறந்து படுதற்குச் சூழ்ச்சி நடந்துகொண்டிருக்கும் போது அவன் தன்னுடைய இன்பவாழ்வைப்பற்றி மனக் கோட்டை கட்டிக்கொண்டிருந்ததானது கொலைஞர் உலையேற்றித் தீயிட்டெரித்துக்கொண்டிருக்கும்போது உலைநீரிற் கிடந்த ஆமை தான் இறந்துபடப் போவதை யறியாது மகிழ்ந்து நீந்தி விளையாடிக்கொண்டிருந்ததாக முடிந்தது.

கொலைஞ ருலையேற்றித் தீமடுப்ப வாமை
நிலையறியா தந்நீர் படிந்தாடி யற்றே
கொலைவல் பெருங்கூற்றம் கோட்பார்ப்ப ஈண்டை
வலையகத்துச் செம்மாப்பார் மாண்பு.

பேதைமை, செய். 1.

(இ - ள்.) கொலைசெய்யும் வலிய பெரிய நமன், பிடித்துக் கொண்டு போதற்குரிய நாளை எதிர்பார்த்துக்கொண்டிருக்க, இவ் விடத்திலே குடும்ப வலையில் சிக்கி, இறுமாந்திருப்பவர்களுடைய பெருமையானது, கொலை செய்பவர்கள் உலையிற்போட்டுத் தீயைமூட்ட ஆமையானது தனக்கு ஏற்பட்டுள்ள நிலைமையினைத் தெரிந்துகொள்ளாமல், அந்நீரிலே மூழ்கி விளையாடினாற் போலும்.

௩௭. நன்றியறிவு மிக்க ஏகலைவன்

ஏகலைவன் என்பவன் ஒரு வேடன். பாண்டவர்கள் காலத்தில் அத்தினபுரக் காட்டில் வாழ்ந்திருந்தான். துரோணருடைய விற்போர் வித்தை அவனுக்கு மிகுந்த மகிழ்ச்சியளித்தது. துரோணரை யடைந்து தனக்கும் வில்வித்தை கற்பிக்கவேண்டுமென்று அவன் வேண்டிக் கொண்டான். அரசிளஞ் சிறுவர்கட்கு வில்வித்தை கற்பித்துக்கொண்டிருக்கும் தாம் ஒரு வேடனுக்குங் கற்பிப்பது தகாது என்று கருதித் துரோணர் தம்மால் முடியாதென்று மறுத்துவிட்டார். துரோணர் மறுத்து விட்டதைக் கண்டு ஏகலைவன் மனந்தளரவில்லை. துரோணரைப்போல் ஓர் உருவஞ் செய்தான். அவ்வுருவத்தை அன்போடு வழிபட்டான். அவ்வுருவத்தின் முன்னின்று வில்வித்தையைப் பழக்கஞ் செய்தான். ஏகலைவன் உண்மையான ஆசிரிய அன்புடையவனாக இருந்தபடியால், அவனுக்கு வில்வித்தை நன்றாகப் படிந்தது. துரோணர் அருச்சுனன் முதலியோர்க்குக் கற்பித்த வித்தைகளெல்லாம் ஏகலைவனுக்கு எளிதாக அமைந்தன. அவன் அருச்சுனனைப் போன்று ஆற்றல்படைத்தவனாக விளங்கினான்.

ஒருநாள் அருச்சுனன் வேட்டைக்குச் சென்றான். அவனுடைய நாய் ஏகலைவனுடைய பயிற்சிக் கூடத்துட் புகுந்தது. துரோணருடைய உருவச் சிலைமீது சிறுநீர் விட்டது. ஏகலைவனுக்குப் பெருஞ்சினம் உண்டாகியது. வில்லிற் கணையைத் தொடுத்து அந்த நாய்மீது எய்தான். கணை வாய் வழியாகப் புகுந்து பின்புறம் வழியாக வெளிப்பட்டது. நாய் விரைந்து அருச்சுனனை யடைந்து மாண்டு விழுந்தது. அருச்சுனன் தன் நாயின்

நிலைமையைக் கண்டான். இத்தகைய வில்வித்தையை நமக்குத் தவிர பிறருக்குக் கற்பிக்கவில்லை யென்று துரோணர் கூறினாரே, இந்த வித்தையைக் கற்றவன் இப்பொழுது வேறொருவன் இருக்கிறான் என்று தெரிகின்றதே என்று எண்ணமிட்டான். அரண்மனைக்குச் சென்றதும் துரோணரைக் கண்டு உண்மையை வினவினான். துரோணர் தாம் கற்பிக்கவில்லை யென்று கூறினார். அருச்சுனனை யழைத்துக்கொண்டு காட்டிற்குச் சென்றார். ஏகலைவனைக் கண்டு வினவினார். அவன் உள்ளதை மொழிந்தான். அருச்சுனன் வேண்டுகோட்படி துரோணர் ஏகலைவனுடைய வலதுகைப் பெருவிரலை காணிக்கையாகக் கேட்டார். ஏகலைவனும் உடனே விரலை வெட்டிக் கொடுத்துவிட்டான். வலதுகைப் பெருவிரல் போய்விட்டால்தான் கற்றுள்ள வித்தையே படாமற் போகுமென்பதை யுணர்ந்திருந்தும் துரோணர் ஆசிரியர் என்னும் முறைமைக்காகத் தனது விரலைக் கொடுத்துப் பெருஞ்சிறப்படைந்தான். சிறிய நன்றியையும் நல்லவர்கள் மிகப் பெரிதாகக் கொள்ளுவார்களென்பது ஏகலைவனிடத்திலே நன்கு விளங்கியது.

தினையனைத்தே யாயினும் செய்தநன் றுண்டால்
பனையனைத்தா வுள்ளுவர் சான்றோர்—பனையனைத்து
என்றுஞ் செயினும் இலங்கருவி நன்னாட
நன்றில நன்றறியார் மாட்டு.

சீர்மை, செய். 4

(இ - ள்.) *விளக்குகின்ற மலையருவியோடு கூடிய நல்ல நாட்டையுடைய பாண்டியனே! தினையளவேயானாலும் பிறர் செய்த நன்மையானது உண்டானால், பெரியோர்கள் பனையளவாக நினைப்பார்கள்; நன்றியறிவில்லாதவரிடத்திலே பனையளவு நன்றியை எக்காலத்தும் செய்தாலும், சிறிதும் நன்மையேற்படமாட்டாது.*

௪௫. புலவரும் கயவரும்

ஓர் ஊரிலே ஒரு பெருஞ் செல்வன் இருந்தான். அவனுடைய இருப்பிடத்தைச் சுற்றிப் பல மக்கள் வாழ்ந்திருந்தனர். செல்வன் நல்ல அறிவு படைத்தவனல்லன். ஒருவிதமான முரட்டுக்குணமும் அறிவின்மையும் தீயவர்களிடத்திலே அச்சமும் உடையவன். அவன் வீட்டிற்கு அண்மையில் ஒரு புலவர் இருந்தார். அவருக்கு ஒரு சமயம் ஓர் ஆபத்து வந்தது. அவர் அதிலிருந்து தப்புவதத்காக நூறுரூபா செலவழிக்க வேண்டியதாக விருந்தது. அவரிடம் பணமில்லை. சமயத்திற் கொடுத்து தவுவாரும் இலர். புலவர் செல்வனிடஞ் சென்று தமது நிலைமையைக் கூறி உதவிபுரிய வேண்டுமென்று வேண்டிக்கொண்டார். செல்வனும் உடனே உதவிசெய்தான். நாட்கள் பல சென்றன. புலவர் இல்லம் செல்வன் வீட்டை யொட்டி யிருந்தமையால் செல்வனுற் புலவருக்குப் பல தடவைகள் பல வகையான இடையூறுகள் ஏற்பட்டன. ஆனுற் புலவர் அவைகளை ஒரு பொருட்படுத்தாமற் பேசாதிருந்தார். நீதிமன்றத்திற் சென்று முறைமை பெறக்கூடிய பெருங் குற்றங்களைப் புரிந்தபோதுகூடப் புலவர் அவைகளை ஒரு பொருட்படுத்தியதாகத் தெரியவில்லை.

செல்வன் தன்னைச் சூழ்ந்திருந்த பலருக்கும் பல முறை பல வகையான உதவிகளைச் செய்துகொண்டிருந்தான். புலவர் ஒருவர் தாம் ஒரே முறை உதவி பெற்றவர். மற்றவர்களோ பன்முறை உதவி பெற்றிருந்தனர். ஆனுல், அவர்கள் அறிவுடையவர்களல்லர். மிகுந்த தீக்குணம் படைத்தவர்கள். செல்வனுடைய செல்வப் பெருக்கைக் கண்டு பொருமை கொண்டு வயிறெரிந்து கொண்டிருந்தவர்கள். ஒரு

முறை செல்வன் அவர்களிற் சிலருக்கு எதிர்பாராதவாறு ஏதோ ஒரு தீங்கைச் செய்துவிட்டான். உடனே அவர்கள் நீதிமன்றத்திற் சென்று செல்வன்மீது வழக்குப் போட்டுவிட்டனர். குற்ற உசாவலிற் செல்வன் மீது குற்றம் ஏற்பட்டது. முறைமன்றத் தலைவர் செல்வனுக்குச் சிறைத்தண்டனை விதித்துவிட்டார். சில திங்களிற் செல்வன் விடுதலைபெற்று வெளிவந்தான்.

ஒருநாள் ஒரு புலவர் செல்வன்மீது செய்யுட்கள் சில செய்துகொண்டு சென்றிருந்தார். அவர் அவனுடன் உரையாடிக்கொண்டிருக்கும்போது செல்வன் தான் சிறை சென்றதையும், தன்னிடம் பன்முறை உதவி பெற்றவர்களேதான் தண்டிக்கப்பெறுமாறு வழக்கிட்டதையுங் கூறினன். அப்பொழுது புலவர் இந்தப் பாட்டைச் செல்வனிடம் கூறிப் பொருளையும் விரித்துரைத்தார். செல்வன் அப்பொழுதுதான் தன் வீட்டிற் கண்மையிலுள்ள புலவரின் பெருமையையும் மற்றவர்களுடைய சிறுமையையும் உணர்ந்துகொண்டு அவரவர்கட்குத் தக்கவாறு நடக்கவேண்டுமென்று முடிவு கட்டினன்.

ஒருநன்றி செய்தவர்க் கொன்றி யெழுந்த
பிழைநூறுஞ் சான்றோர் பொறுப்பர்—கயவர்க்(கு)
எழுநூறு நன்றிசெய் தொன்றுதீ தாயின்
எழுநூறுந் தீதாய் விடும்.

கயமை, செய். 7.

(இ - ள்.) பெரியோர் ஒருதவி செய்தவரிடத்திற் பொருந்தியுண்டாகிய நூறு குற்றங்களையும் பொறுத்துக்கொள்வார்கள்; கீழ் மக்களுக்கு எழுநூறு நன்மைகளைச் செய்து ஒரு குற்றத்தைச் செய்துவிட்டால், முன் செய்த எழுநூறு நன்மைகளுங் குற்றமாக முடிந்துவிடும்.

௬௪. மகன் அறிவு தந்தை அறிவு

உலகில் உள்ள ஒவ்வொரு பொருள்களின் குணமும் அப் பொருளுக்கு முந்திய பொருளின் குணத்தைத் தான் பற்றுக்கோடாகக் கொண்டிருக்கும். அவரை போட்டால் அவரைக்காய்தான் கிடைக்குமே தவிர துவரைக்காய் கிடைக்கமாட்டாது. அதுபோல உலகில் தோன்றும் மக்கள் தம் தாய் தந்தையரின் அறிவைத் தான் தம்முடைய அறிவாகவும் கொண்டிருப்பார்கள்.

கண்ணில்லாஞகிய திருதராட்டிரன். செம்மையான வுள்ளம் படைத்தவனல்லன். வஞ்சகம் முதலிய தீக் குணங்களை நிறைத்து வைக்கப்பெற்ற பேழையைப் போன்றவன். வீமனுடைய ஆற்றலைக்கண்டு கண்ணிலான் மிகப் பொருமை கொண்டிருந்தான். வீமனைத் தொலைப்பதற்குத் தன் மகனுக்குப் பல முறையுஞ் சூழ்ச்சி சொல்லிக்கொடுத்தான். பாரதப்போர் முடிந்து ஐவர்களும் தன்னை வந்து வணங்கியபோதுகூட எல்லோருக்கும் வாழ்த்துரைகள் கூறிவிட்டு வீமனைத் தழுவிக்கொள்ள விரும்புவதாகக் கூறினுன். திருதராட்டிரன் குணத்தை யுணர்ந்திருந்தவர்கள் வீமனைப் போல் ஒரு பெரிய இரும்புப் பாவையைச் செய்து அப் பாவையைத் தோதாக வைத்துக்கொண்டிருந்தார்கள். வீமனைத் தழுவ விரும்பிய கண்ணிலானிடம் அப் பாவையைத் தள்ளி நிறுத்திஞர்கள். கண்ணிலான் அப் பாவையை இறுகக்கட்டித் தழுவினுன். இரும்பினுல் ஆகிய பாவை தூளாகிவிட்டது. அனைவரும் திருதராட்டிரனுடைய தீய எண்ணத்தை நன்கு தெரிந்து கொண்டார்கள்.

துரியோதனனிடமும் இத்தகைய தீய எண்ணங்கள் தாம் குடிகொண்டிருந்தன. அவனுடைய உடன்

பிறந்தார்களும் வஞ்சகம் பொருந்தியவர்கள் தாம். தந்தையறிவைக் கொண்டிருந்த மைந்தர்கள் இறுதியில் மாண்டொழிந்தார்கள்.

சேந்நெல்லா லாய செழுமுளை மற்றுமச்
சேந்நெல்லே யாகி விளைதலால் - அந்நெல்
வயல்நிறையக் காய்க்கும் வளவயல் ஊர
மகனறிவு தந்தை யறிவு.

—பன்னெறி, செய். 7

(இ - ள்.) செந்நெல்லினால் உண்டாகிய செழித்த முளை, பின்னும் அச் செந்நெல்லாகவே விளைகின்றபடியால், அச் செந்நெல், வயல் முழுவதும் விளைகின்ற, வளப்பம் பொருந்திய கழனிகளாற் சூழப்பெற்ற மருதநிலத்தையுடைய பாண்டியனே ! தந்தையினுடைய அறிவானது, பிள்ளையினுடைய அறிவாகும்.

பாட்டு முதற் குறிப்பு

கழக வெளியீடு—௫௬௦

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.,
1-140 BROADWAY, :: MADRAS, 1.

Head Office:
24, EAST CAR STREET, THIRUNELVELI.

விலை ரூ. 1-4-0.

அப்பர் அச்சகம், சென்னை, 1.